(1) ஒரு மனிதனை அவனுடைய பண்பினுல் மதிப்பிடாமல், வேறு எதைக்கொண்டு மதிப்பிடுவது ?

(2) மேலும், ஒவ்வொரு மனிதனுக்கும் தனித் தனியே அவனுக்கென்று ஒரு குணவிசேடம் இருக்கிறது. இதை யாராலும் மறுக்க முடியாது. இந்தக் குணவிசேடத்தைத்தான் ஆங்கிலத்தில் Character என்று கூறுகிறுர்கள். இதுவே ஒருவனது சிந்தனையையும் செயலையும் ஒவ்வொரு நிமிஷமும் உருவாக்கி வருகிற உட்சக்தி யென்று சொல்லப்படுகிறது. ''வாழ்வில் நாம் மனப்பூர்வமாக இயற்றிய நல்ல அல்லது தீய செயல்களால் நம் உள்ளத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் முத்திரையே நமது குணவிசேடம் எனப்படுவது!'' என்கிறுர் கெய்க்கீ *(Geikie)* என்னும் பேரறிஞர். இந்த முத்திரை நிலையானதல்லவென்று எப்படிச் சொல்ல முடியும் ?

(3) குணவிசேடத்தைப் புறக்கணித்துவிட்டால், ஒரு மனிதனுக்கும் இன்னெரு மனிதனுக்கும் இடையே உள்ளப்பான்மையில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை வேறு எந்த அளவுகோலைக் கொண்டுதான் கணக்கிடுவது ?

இத்தனையும் நியாயமான கேள்விகளே!

ஆனல், ஒரு மனிதனுடைய பண்பு, குணவிசேடம், உள்ளப்பான்மை யென்று சொல்லப்படுபவையெல்லாம், அவனுடைய மனத்தைப் பற்றிய விஷயங்கள். அவனுடைய காதையும் மூக்கையும் நாம் கண்ணுல் பார்ப்பதுபோல, அவற்றைப் பார்க்க முடியாது. அவனது பேச்சையும் நடத்தையையும் கொண்டே, அவன் குணத்தை நாம் தீர்மானிக்கிறேம், இப்படித் தீர்மானம் செய்வது நம்முடைய மனமே யல்லவா ?

இந்த நம்முடைய மனமானது, மற்றவனுடைய சொற்களையும் செயல்களையும் எப்படி எடை போட்டுப் பார்க்கிறது ?

தன்னுடைய சொந்த அனுபவங்கள், சொந்த அபிப்பிராயங்கள், சொந்த விருப்பு வெறுப்புக்கள் இவற்றையெல்லாம் எடைக் கற்களாகக் கொண்டே, அது மற்றையோர் செய்யும் காரியங்களை நிறுத்து மதிப்பிட முற்படுகின்றது. இந்த எடைக் கற்கள் உண்மையில் சரியானவை தாமா ?

அது மட்டுமல்ல; நம்மெல்லோரிடத்தும் இருப்பது ஒரே மாதிரியான எடைக் கற்கள் தாமா ?

இல்லவேயில்லை. காரணம், நம் ஒவ்வொருவருக்கும் வாழ்வில் ஏற்பட்டுள்ள சொந்த அனுபவங்கள் வெவ்வேறு விதமானவை. அவ்வனுபவங்களின் விளைவாக நம் உள்ளத்தில் உருவாகியுள்ள அபிப்பிராயங்களும் விருப்பு வெறுப்புக்களும் பல்வேறு வகைப்பட்டவை. இந்த அனுபவங்கள், அபிப்பிராயங்கள், விருப்பு வெறுப்புக்கள் ஆகிய எல்லாமும் சேர்ந்த மொத்தமான பிண்டத்தையே நம்முடைய குணவிசேடம் *(Character)* என்று கூறுகிறேம். எனவே, நம்முடைய குணவிசேடத்தை எடைக்கல்லாகக் கொண்டே நாம் இன்னெருவனுடைய குணவிசேடத்தை நிறுத்துப் பார்க்கிறேம்! அதாவது, ஒரு சேனைக்கிழங்கை எடைக்கல்லாகப் போட்டு இன்னெரு சேனைக் கிழங்கை நிறுத்துப் பார்ப்பது போல!

ஆனால், காய்கறி வியாபாரிகள் எடைக் கல்லுக்குப் பதிலாகத் தராசுத் தட்டில் போட்டு நிறுக்கும் சேனைக் கிழங்கு இருக்கிறதே, அது ஏற்கெனவே ஒரு நிஜமான எடைக் கல்லால் நிறுக்கப்பட்டு, அதன் சுத்தமான எடை இவ்வளவுதான் என்று நிர்ணயிக்கப்பட்டதாயிருக்கும். நம்முடைய குணவிசேடமோ இதற்கு முன்பு எவராலும் அவ்வாறு நிறுத்து நிர்ணயிக்கப்பட்டதல்ல. ஆகையால் இன்னொருவனுடைய குணவிசேடத்தை எடை போடும் தகுதி அதற்குக் கிடையவே கிடையாது.

மேலும், உலகில் எந்த இரண்டு மனிதர்களுடைய குணவிசேடங்களும் நூற்றுக்கு நூறு ஒரே மாதிரியாக ஒத்திருப்பதில்லை. இதை மனோதத்துவ விஞ்ஞானிகளே ஒப்புக்கொள்கின்றனர். ஒரே தாயின் வயிற்றில் ஒரே சமயத்தில் பிறந்து உருவத் தோற்றத்தில் ஒன்றுபோலவே இருக்கும் இரட்டைக் குழந்தைகள்கூட, வெவ்வேறு விதமான குணவிசேடங்களோடு விளங்குகின்றன. அப்படியிருக்க மற்றையோரைப் பற்றிச் சொல்லவேண்டுமா? எனவே ஒரு மனிதனுடைய குணவிசேடத்தை நம்முடைய குணவிசேடத்தால் நாம் எடை போடும்போது, அப்படி எடை போடுகிறவர்கள் எத்தனை பேர் இருக்கிறோமோ அத்தனை விதமான எடைக் கற்கள் அதில் உபயோகிக்கப்படுகின்றன. அதன் விளைவாக, அத்தனை விதமான மதிப்பீடுகளும் அந்த மனிதனைப் பற்றிக் கிடைக்கின்றன. அவற்றுள் எந்த மதிப்பீடு சரியானது என்பதை எப்படித் தீர்மானிப்பது? ○

மகான்களின் அகில இந்திய பரம்பரை



ஆச்சாரிய வினோபா

சங்கராச்சாரியார் இந்தியா முழுவதிற்கும் உரிய தொண்டராய் இருந்தவர். அவர் தாய் மொழி மலையாளம். அவர் மலையாளத்திலேயே தம் நூல்களை எழுதியிருந்தால் அவரால் இந்தியா முழுமைக்கும் பணி புரிந்திருக்க முடியாது. அவர் அக்காலத்திய பொது மொழியான ஸம்ஸ்கிருதத்திலேயே எல்லா நூல்களையும் எழுதினர். அவரது ஸம்ஸ்கிருதப் படிப்பு பெரிய பெரிய காசிப் பண்டிதர் படிப்பையும் விஞ்சுவதாய் இருந்தது. இந்தியாவில் இவ்வாறு தோன்றிய அகில இந்திய ஊழியர் ஒருவர் இருவரல்ல, எத்தனையோ பேர். இவர்கள் நாடெங்கும் சுற்றிப் .பணி புரிந்திருக்கிறர்கள். சைதன்ய மகாப் பிரபு பண்டரீபுரம் வந்திருந்தார். துகாராம சுவாமிகளின் குரு யார் என்று கேட்டால், அவருக்கு நேரிடையாக உபதேசம் அளித்தகுரு ஒருவரும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கும். ஆனுல் அவருக்குக் கனவில் குரு காட்சியளித்தார். அவர் சைதன்ய மதத்தைச் சேர்ந்தவர் போல் இருந்தாரென்று சொல்வதுண்டு. எனவே வங்காளத்தைச் சேர்ந்த சைதன்ய மதத்தவர், மகாராஷ்டிரத்திற்கும் அப்பொழுது போவதுண்டு என்று தெரிகிறது.

வல்லபாச்சாரியார் பிறந்தது ஆந்திர நாட்டில். ஆனுல் அவர் வாழ்ந்து பிரசாரம் செய்ததெல்லாம் குஜராத்திலும் இராஜஸ்தானிலும் ஆகும். புகழ் பெற்ற இந்தி பக்தகவிஞரான சூர்தாசர் வல்லபாச்சாரியாரின் சீடரே. எனவே இந்தி இலக்கியம் வல்லபாச்சாரியருக்கு எவ்வளவு கடமைப்பட்டுள்ளது என்று சொல்லத் தேவையில்லை. இவ்வாறு எத்தனையோ மகான்கள் பாரத நாடெங்கும் சுற்றி, இந்தியா ஒரே நாடு என்பதைக் காட்டி வந்தார்கள்.

நாமதேவரென்ற மகாராஷ்டிர பக்தர் பஞ்சாபிலும் பெரிதும் போற்றப்படுகிறர். பஞ்சாபில் நாமதேவர் பெயர் தெரியாத வீடோ, குழந்தையோகூட இராது. அவர் 15 ஆண்டுகள் பஞ்சாபில் வசித்தார். நாமதேவருக்குப் பிறகு ஞான தேவர் 50 ஆண்டுகள் வாழ்ந்தார். அவரும் இந்தியா முழுவதிலும் பிரச்சாரம் செய்தார். மோரோபந்த் என்ற மராத்திக் கவிஞர், 'நாமதேவர் பகவானின் விட்டலர் என்ற திருநாமத்தை எங்கும் பரப்பினர்' என்று சொல்லியிருக்கிறர். இராஜஸ்தானத்தைச் சேர்ந்த மீராபாய், 'விட்டல் வரநேவ்ரி' (விட்டலனை நான் வரனகக் கொண்டேன்) என்கிறர். விட்டலனைப் பற்றி அவர் பல பதங்களில் பாடியிருக்கிறர். குஜ

ராத்தில் விட்டலர் பெயரை பிரபலமாக்கியவர் நாமதேவரே. நாமதேவர் நானக்கிற்கும் முன்பு இருந்தவர். அவர் இயற்றிய 70, 80 இந்திப் பாடல்கள் சீக்கியரின் சமய நூலாகிய 'க்ரந்த் சாகப்'பில் இடம் பெற்றுள்ளன.

சமர்த்த ராமதாசர் தஞ்சாவூரில் ஒரு மடம் அமைத்து அங்கே தம் சீடர் ஒருவரை அமர்த்தினார். அவர் கையில் பிட்சைப் பையையும் 'தாஸபோதம்' என்ற நூலையும் அளித்து, சென்னைப்பிரதேசம் முழுவதிலும் சேவை செய்யுமாறு பணித்தார். 'தாஸபோத'த்தை தமிழ் நாட்டில் யார் கவனிப்பார்கள்? தமிழில் உள்ள நூல்களின் சிறப்பைக் கருதுகையில், அவற்றிற் கொப்பான நூல்கள் பிறமொழி எதிலும் கிடைத்தல் அரிதென்றே சொல்ல வேண்டும். கடவுள் பக்தியில் தோய்ந்த எத்தனையோ மகான்களும் ஆச்சாரியர்களும் தென்னாட்டில் உதித்திருக்கிறார்கள். இதனாலேயே 'பக்திக் கன்னி பிறந்தது தென்னாட்டில்' என்று ஸம்ஸ்கிருதத்தில் ஒரு மூதுரை வழங்குகிறது. இத்தகைய தென்னாட்டிற்கு ராமதாசர் தம் சீடரை அனுப்ப, அவருக்குத் தஞ்சாவூரில் ஓர் ஆசிரமும் ஏற்பட்டது. இன்றும் அந்த ஆசிரமம் சிறப்பாக ஸ்தல மக்களின் ஆதரவோடு இருந்து வருவதை நான் நேரில் கண்டேன். ○

யார் பிராமணன் ?



கௌதம புத்தர்

தேவைகளைக் குறைத்துக் கொண்டு வாழ்பவன் எவனோ, அவனையே பிராமணன்என்பேன்.

தாயைக் கொண்டோ, குல மூலத்தைக் கொண்டோ, ஒருவனைப் பிராமணன் என்று கூற மாட்டேன். அவன் செல்வவந்தனாயிருந்தால் அகம்பாவியாவான்; ஆனால் எவன் எல்லாவித ஆசைகளிலிருந்தும் விடுபட்ட ஏழையோ, அவனையே பிராமணன் என்று கூறுவேன்.

ஒருவன் பிராமணன் ஆவது, தன் சடைத் தலையால் அல்ல; குலம் கோத்திரத்தினால் அல்ல; பிறப்பினால் அல்ல. எவனிடம் உண்மையும் அறமும் நிலைத்திருக்கிறதோ, அவனே பாக்கியவான்; அவனே பிரமணன்!

எவனுடைய அறிவு ஆழ்ந்ததோ, எவன் ஞான மேதை உடையவனோ, நல்லவழி தீய வழி எதுவென்பதை எவன் உணர்ந்தவனோ, எவன் மெய்ப்பொருள் முடிவை அடைந்தவனோ, அவனே பிராமணன் என்பேன்.

பகைமைத் தன்மையுடையவர் மத்தியில் பகைமையற்றவனாயும், குற்றம் குறையே கண்டு பிடிப்பவரிடையில் மிருதுவானவனாகவும், ஆசை பிடித்தவர்களிடையே ஆசையற்றவனாகவும் எவன் இருக்கிறானோ, அவனையே பிராமணன் என்பேன்.

எவன் சிந்தனையுள்ளவனோ, எவன் குற்றமற்றவனோ, எவன் நிலையான அமைதியுள்ளவனோ, எவன் ஆசைகளற்றவனோ, எவன் உத்தம ஞானியின் முடிவான இலட்சியத்தை அடைந்தவனோ, அவனையே நான் பிராமணன் என்பேன்.

இந்த உலகில் புண்ணியபாவங்களுக்கு அப்பாற்பட்டவன், அவற்றின் தளைகளுக்கு மேற்பட்டவன், சோக உணர்ச்சியிலிருந்தும் பாபத்திலிருந்தும் அசுத்தத்திலிருந்தும் விடுபட்டிருப்பவன் எவனோ, அவனே பிராமணன் என்பேன்.

இந்த உலகில் எல்லாவித ஆசைகளையும் விட்டு விட்டு வீடு இல்லாமல் சஞ்சரிப்பவன் எவனோ, எவனிடம் வாழ்வின் மோகமெல்லாம் வெளியேறி விட்டதோ, அவனே பிராமணன் என்பேன்.

ஊசி முனையிலிருந்து கடுகு உருண்டு விழுவதுபோல, எவனிடமிருந்து கோபமும் துவேஷமும் கர்வமும் பொறாமையும் நழுவி விழுந்து விடுகிறதோ; அவனே பிராமணன் என்பேன்.

இகத்திலும் பரத்திலும் எதிலும் ஆசையற்றவன், எந்த நாட்டங்களும் இல்லாதவன், கற்றவன் எவனோ அவனே பிராமணன் என்பேன்.

அறிவும் அன்பும் அருள் இரக்கமும்

ஸ்ரீ இராமலிங்க அடிகள்

எல்லா உயிர்களும் இறைவனது அருளால் வாழ்கின்றன.

எல்லாவுயிர்களுக்கும் இயற்கையிலேயே அறிவும் அன்பும் ஆற்றலும், அருள் இரக்கங்களும் உண்டு. ஆனால் இவைகள் அறியாமை என்னும் மலத்தால் மூடப்பட்டு மங்கிக் கிடக்கின்றன.

மலம் என்னும் அறியாமைக்கும், மனத்திற்கும் அதீதப்பட்டு, பெரும் பேரறிவும், பேராற்றலும் அன்பும் அருள் இரக்கமும் இயற்கையாகவே உடையவராய் இருப்பவர்தாம் கடவுள்.

எவன் ஒருவன் அன்பையும் இரக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை நடத்துகிறானோ, அவனுக்கு எல்லாம்வல்ல பரம்பொருள்—அருள்ஜோதி ஆண்டவர்—தமது இன்னருளை மிக மிக வழங்குவார்.

ஒவ்வோர் உயிரும் தன் அறிவின் பயனாக அன்பைக் காட்டி, அவ் அன்பின் பயனாக அருளிரக்கம் கொண்டு, ஏனைய உயிர்களின் நன்மைக்காக உள்ளங் கசிந்து, உயிர்களின் துன்பத்தைக் கண்ட போதோ கேட்டபோதோ உள்ளம் குழையும் இயல்பே அருளியல்பு ஆகும்.

ஆண்டவன் எல்லாவுயிர்களையும் ஒரே நோக்கமாக — சமபாவனையாக — பார்க்கும் இயல்புடையவர். ஆதலின் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அருள்பெற வேண்டுமானால், அவர்களுக்குச் சமத்துவ சிந்தை —சமரசக் கோட்பாடு – பரந்த நோக்கம் — இன்றியமையாதவை.

ஆண்டவனது திருவருளைப் பெற வேண்டில் சாதிமதம், சமயம், வருணம், நாடு, மொழி, காலம், பழக்க வழக்கங்கள், மூட நம்பிக்கைகள் இவை போன்ற தடைகளை அறவே ஒழித்தல் வேண்டும்.

மக்கள் அறிவையும் அருளிரக்கத்தையும் வளர்த்தபின், ஆண்டவனை வழிபடத் தொடங்கி,

ஆண்டவனது அன்பையும் அருளிரக்க நிலையையும் உணர்ந்து இன்புற்று, அவ் வழியாகவே தம் அறிவையும், அன்பையும், அருள் இரக்கங்களையும் செலுத்தி வாழ்தல் வேண்டும்.

நாடோறும் ஆண்டவனை வணங்குதலும், வாழ்த்துதலும் வேண்டும். இல்லையேல் உலகத்தில் உயிர்களிடத்தில் அன்பும் அருளிரக்கமும் ஒரு சிறிதேனும் ஏற்படமாட்டா.

உயிர்களிடத்தே நாம் காட்டும் அன்பும் உணர்ச்சியும் அருள் இரக்கங்களும் இறைவனைப்போல் பயன் கருதாததாய் இருத்தல் வேண்டும்.

அறிவும், உணர்ச்சியும், அன்பும், அருள் இரக்கங்களும் மக்களைத் தெய்வ இயல்பு உள்ளவர்களாக ஆக்குவிக்கும் பேராற்றல்களாகும்.

ஆதலின், தெய்வ வழிபாடு மிக மிக அவசியம் என உணர்தல் வேண்டும். இன்றேல் சமரசம், சன்மார்க்கம், எல்லா உயிர்களும் ஒன்று என்று பேசும் உரையாடல், யாவும் வெறும் பேச்சன்றி ஒரு செல்லாக் காசுக்கும் உதவா.

ஆண்டவன் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர், அவனுடைய பேரன்பு, பேரருள், பேரிரக்க நிலையெல்லாம் நினைந்து உருகுதல் வேண்டும். ○

பாரதியார் பொன் மொழிகள்

பெரிய பெரிய கஷ்டங்கள் பட்ட பிறகு தான், சிறிய உண்மைகள் புலப்படுகின்றன.

இந்தக் காலத்தில், யாருக்கும் பயந்து நாம் நமக்குத் தோன்றுகிற உண்மைகளை மறைக்கக் கூடாது.

எழுதிப் படிப்பதெல்லாம்
மெய்யுமில்லை.
எதிர்நின்று கேட்பதெல்லாம்
பொய்யுமில்லை.

வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும் எதிலும் எப்போதும் நேர்மையிருக்க வேண்டும். உண்மையிருக்க வேண்டும்,

உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணுடி. ஆதலால், எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

உலகத்தின் செயல்களெல்லாம் கடவுளுடைய செயல்கள்.

மானுடரே. நம்முடைய இஷ்டப்படி உலகம் நடக்கவில்லை. தெய்வத்தின் இஷ்டப்படி உலகம் நடக்கிறது.

இந்த உலகம் முழுவதும் பரிபூரண மங்களத் தன்மையுடையது.

உழைப்பு எப்போதுமுண்டு. தெய்வத்தின் தலையிலே சுமையைப் போட்டுவிட்டு, நாம் கவலை, பயம் என்ற இரண்டு நாய்களுக்கும் உள்ளத்தை இரையாக்காமல், ஸந்தோஷமாகப் பாட்டுப் பாடிக்கொண்டு நிலத்தை உழுவது நல்லது. அழுதுகொண்டே உழுதால் உழவுக்குக் கெடுதி; மனத்துக்கு ஸந்தோஷமில்லை; மடத்தன்மை தவிர வேறொன்றுமில்லை.

நாளெல்லாம் வினை செய்!

எப்போதும் பாடுபடு. எப்போதும் உழைத்துக்கொண்டிரு. உழைப்பிலே சுகமிருக்கிறது. வறுமை, நோய் முதலிய குட்டிப் பேய்களெல்லாம் உழைப்பைக் கண்டவுடன் ஓடிப்போய் விடும்.

பெரிய மனுஷத்தன்மைக்கும் சரீர உழைப்புக்கும் விரோதம் என்று நம்மவர்களில் சிலரின் மனத்தில் எந்தப் பிசாசோ எழுதி வைத்துவிட்டது. ஆகையால், சொற்பப் பணமுடையவன்கூட, தனக்கு ஜலம் கொண்டு கொடுக்க ஓராளும், குளிப்பாட்ட ஓராளும், தலை துவட்ட ஓராளும் வைத்துக்கொண்டு, பாயோடே கிடக்கும் கிழவியைப் போல் நடந்து கொள்ளுகிறான்.

உயிருள்ளவரை ஒருவன் தொழில் செய்யாதிருக்கக் கடவுளுடைய இயற்கை இடங் கொடாது.

கடலடியை மானுடர் அளந்து பார்த்திருக்கிறார்கள். உள்ளத்தின் அடி காண்பது அதனினும் பல மடங்கு கஷ்டம். இருந்தாலும் சோர்வு பெற வேண்டா. ஒவ்வொருவனும் உள்ளக் கடலில் இயன்றவரை மூழ்கி அங்கிருந்து பொருள் கொண்டு வரலாம். எத்தனைக் கெத்தனை ஆழத்தில் போகிறாயோ, அத்தனைக்கத்தனை நல்ல முத்து கிடைக்கும்.

மனவுறுதி, ஸந்தோஷம், உலகை நடத்தும் சக்தி நமக்கு நன்மை செய்யுமென்ற நம்பிக்கை, சரீரவுழைப்பு முதலிய நற்குணங்களைக் கைக் கொண்டு ஊக்கத்தைத வழக்கப்படுத்த வேண்டும்.



கடவுளைக் காண்பது எப்படி ?

மகாத்மா காந்தி

தூய்மையான இருதயம் இல்லாத எந்த ஆணும் பெண்ணும் இறைவன் சந்நிதியை நெருங்கவே முடியாது.

தேக பலம் குன்றியவர்களின் ஒரே ஆயுதம், அவர்களுடைய தூய்மைதான்!

இருதயம் மட்டும் தூய்மையானதாயிருந்தால், ஆபத்து நேரும்போது அதனுடன் போராட ஆயுதங்களும் மனிதர்களும் தாமே வந்து சேர்வார்கள் என்பது என் நம்பிக்கை!

அகத் தூய்மையைப் பரிபக்குவமாகப் பண்படுத்த வேண்டும். அதை வளர்ப்பதற்குத்தான் கல்வி உபயோகப்பட வேண்டும்.

அரசியல் வாழ்க்கையிலும் கூட அகத் தூய்மை அத்தியாவசியமாகும்.

அகத்தூய்மைபெறுவதில்விருப்பமுள்ளவனுக்கு, உடலைத் தூய்மையாய் வைத்திருப்பதும், கிளர்ச்சி தராத உணவுகளையே அருந்துவதும், அடிக்கடி உபவாசம் இருப்பதும் உதவி செய்கின்றன.

இருதயத்தில் உள்ளடங்கியிருப்பதுதான் வெளியே வந்து வெளிப்படையான செயல்களிலும் நடத்தையிலும் புலப்படுகிறது.

எதையும் செய்துவிடும் சக்தி தனக்கு உண்டு என்று மனிதன் பெருமையடித்துக் கொள்ளும் அதே சமயத்திலேயே, கடவுள் அவனுடைய அகம்பாவத்தை அடக்கிவிடுகிறார்!

நாம் உண்மையாக வாழ்வது என்றால், கடமையைச் செய்வது என்றுதான் அர்த்தம்.

பழியையும் புகழையும் எல்லாம் வல்ல ஆண்டவன் திருவடிகளில் சமர்ப்பித்துவிட்டு, என் பாதையிலே நான் நடந்து செல்கிறேன்.

கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை நிரூபித்துக் காட்ட முடியாது; அது தேவையுமில்லை. கடவுள் ஒருவர் உண்டு என்பதை நாம் உணராவிடில், அதனால் நமக்குத்தான் ஊறுபாடு!

சத்தியமே என் கடவுள்; அகிம்சையே அதைக் காணும் வழி!

வாயில்லாப் பூச்சிகளாகிய ஜனங்களின் உள்ளங்களிலே காணும் கடவுளைத் தவிர, நான் வேறு எந்தக் கடவுளையும் அறியேன்!

கடவுளைக் காண்பது என்பது எல்லா உயிர்களிலும் அவரைக் காண்பதே ஆகும்! அதாவது ஆக்கப்பட்டுள்ள உயிர்கள் அனைத்திலும், நாம் ஒன்றென உணர்வதாகும்!

கடவுள்மீது அழியாத நம்பிக்கை இருப்பதென்ருல், மனிதவர்க்கம் முழுவதையும் சகோதரராகவே கருதுவதுமாகும்!

பொய்மையும் தன்னடக்கமின்மையும் உடைய ஒரு மனிதன், தன்னுள்ளே கடவுள் குடியிருப்பதாகச் சொல்லிக் கொள்ள முடியாது!

கடவுளை நான் வழிபடுவது சத்திய வடிவிலேயாகும். அவனுடைய தரிசனம் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை என்ருலும், அவனைச் சதா தேடிக்கொண்டேயிருக்கிறேன்.

எப்போது மனிதன் வெளியில் உள்ள லோகாயத ஆயுதங்களைத் தூக்கி வீசி எறிந்து விடுகிருனே, அப்பொழுது கடவுளே அவனுடைய கேடயமாக வந்து அமருகிருர்! ஆனுல் மனிதன் தன் இடுப்பில் ஒரு துப்பாக்கியை ஒளித்து வைத்திருப்பானேயானுல், அவனுடைய உள்ளத்திலுள்ள ஆற்றல் ஒழிந்து போகும். அவன் அதுவரை தன்னை யாராலும் வெல்ல முடியாது என்று எண்ணியிருந்ததெல்லாம் மறைந்து போகும்! ○


வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை, 4 தணிகாசலம் செட்டி ரோடு சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.

15.5.69 · சௌமிய வை

விலை 30 காசு

ஆசிரியர்:

திருமதி தமிழ்வாணன்



சேங்காலிபுரம் தீக்ஷிதர் பெருமான்

வேலவன்

நம் பாரத நாட்டுக்கு ஒரு தனிப்பெருமை உண்டு. அது தான் சுருதிகளையும் ஸ்மிருதிகளையும் தோற்றுவித்த பெருமை. சுருதிகள் என்பவை வேதங்கள், ஸ்மிருதிகள் என்பவை தர்மசாஸ்திரங்கள்; அதாவது, அறநூல்கள்.

அந்த சுருதிகளையும் ஸ்மிருதிகளையுமே காலவெள்ளத்தால் அழிந்து போகாதவாறு போற்றிக் காப்பாற்றி வந்த பெருமை, நம் நாட்டில் உள்ள சில உத்தமமான அந்தணக்குடும்பங்களுக்கே உரியதாகும். இவ்விதழின் அட்டைப் படத்தை* அலங்கரிக்கும் பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள், அத்தகைய ஒரு பழமையான குடும்பத்தில் தோன்றிய பெருமைக்கு உரியவர் ஆவர்.

கடந்த 32 தலைமுறைகளாக (அதாவது, ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு மேலாக), வேத சாஸ்திரங்களை ஓதுவதும் ஓதுவிப்பதும், அவற்றில் விதிக்கப்பட்டுள்ள யாக யக்ஞங்களை நடத்துவதும் நடத்துவிப்பதும் ஆகிய இவற்றைத் தவிர வேறு எத்தொழிலிலும் ஈடுபடாமல் வாழ்ந்து வருகிற இதுபோன்ற ஒரு புனிதமான வைதிக பரம்பரை, நம் தமிழ்நாட்டிலே இன்னொன்று இருக்குமோ என்னவோ எனக்குத் தெரியாது. அவ்வாறே வேதங்களிலும், சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் இதிகாசங்களிலும் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களைப்போல் ஆழமான ஞானமும் அற்புதமான மேதாசக்தியும் வாய்ந்த இன்னொரு மகாபண்டிதரை நம்மால் காண முடியும் என்றும் என்னால் நம்ப முடியவில்லை.

சேங்காலிபுரம் என்பது, கும்பகோணம் திருவாரூர் மார்க்கத்தில் குடவாசலுக்கு அருகே உள்ள ஒரு சிறிய ஊர். ஸ்வயம் கலிஹரபுரம் அல்லது ஸ்வயம் காளிபுரம் என்பதுஅதன் உண்மையான பெயர். ஸ்வயம் கலிஹரபுரம் என்றால், தானாகவே கலிதோஷத்தைப் போக்குகிற ஊர் எனப் பொருள்படும். அங்கு காளிதேவி வந்து தவம் செய்தமையால் ஸ்வயம் காளிபுரம் என்ற பெயரும் அதற்கு ஏற்பட்டது. இரண்டும் சேர்ந்து, நடைமுறையில் சேங்காலிபுரம் என்று ஆகிவிட்டது.

இந்த ஊரில் பிரகலாத தீர்த்தம், கௌதம தீர்த்தம் என இரண்டு தீர்த்தங்கள் இருக்கின்

---

* புகைப்படம் உதவியவர்கள் சென்னை ஆஸ்திக சமாஜத்தினர்.

றன. சிவாலயங்கள் இருக்கின்றன. அந்த ஆலயங்களைப் போலவே மக்கள் பயபக்தியோடு சென்று தரிசித்து வருகிற ஒரு மகானுடைய சமாதியும் இருக்கிறது. அந்த மகான் பெயர் வைத்தியநாத தீக்ஷிதர். ஆனால் அவரை எல்லோரும் முத்தண்ணா என்றுதான் அழைப்பார்களாம். வேதாந்த சிம்மமாக விளங்கிய மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளால் ''அஜாத சத்ரு'' என்று பட்டம் வழங்கப்பெற்றவர் அந்த வைத்தியநாத தீக்ஷிதர். அவருடைய பெருமைகளை விவரிப்பதென்றால், இந்த ஏட்டிலே இடம் காணாது. அப்பேர்ப்பட்ட மகாஞானியின் மகன் வயிற்றுப்பேரன் தான் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்.

ஸ்ரீ தீக்ஷிதரவர்களுக்கு மூன்றாவது வயதிலேயே அக்ஷராப்யாசம் செய்துவைக்கப்பட்டது. செய்துவைத்தவர் பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகள் என்னும் ஒரு மகா பண்டிதர். (இவர் முத்தண்ணா அவர்களின் சிஷ்யர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.) அதற்கு அப்புறம் ஐந்தாவது வயதில் உபநயனம். உபநயனம் ஆனவுடன் வேத அத்யயனம். பதினாலாவது வயதுக்குள் செய்ய வேண்டிய அத்யயனம் அனைத்தையும் செய்து முடித்தாகிவிட்டது. பின்னர் பதினைந்தாவதுவயதில் திருமணமும் ஆகிவிட்டது.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள் என்னும் புகழ் பெற்ற மகாவித்வானின் மகள் சாரதா என்னும் புண்ணியவதியை, இவர் தம் பத்தினியாகப் பெற்றார். அப்போது அந்த அம்மையாருக்கு வயது ஒன்பதுதான் ஆகியிருந்ததாம்!

திருமணம் ஆனபின், ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் சிறிதுகாலம் தம் மாமனாரிடமே காவியம் படித்தார். பின்னர் சேங்காலிபுரத்திலேயே பஞ்சாபகேசய்யர் என்பவரால் பல வித்வான்களைக் கொண்டு நடத்தப்பெற்ற வால்மீகி ஆஸ்ரமம் என்னும் கலாநிலயத்தில் காவியம், சம்பு, நாடகம், அலங்காரம் ஆகியவற்றைக் கற்றார். ஸ்ரீ காமகோடி ஆச்சாரியாளுக்குத் தர்க்கசாஸ்திரம் சொல்லிவைத்த விஷ்ணுபுரம் ஸ்வாமி சாஸ்திரிகளிடத்திலேயே ஸ்ரீ ஆச்சாரியாளின் பொருளுதவியோடு தாமும் தர்க்கம் வாசித்தார். அத்துடன் சேங்காலிபுரம் தியாகராஜ சாஸ்திரிகள் என்னும் பெரியாரிடம் தர்ம சாஸ்திரம் கற்றார். தம் தந்தையாராகிய சுப்பிரமணிய தீக்ஷிதர் பால் மந்திர சாஸ்திரங்களை ஓதி உணர்ந்தார். முடிவில், கடலங்குடி நடேச சாஸ்திரிகளிடம் வேதாந்தமும் ஜ்யோதிஷமும் பாடம் கேட்டார்.

ஸ்ரீ அனந்தராமதீக்ஷிதர் அவர்கள் வியக்கத்தக்க மேதாவிலாசத்தைப் பெற்று விளங்குகிறார்கள். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், ஸ்ரீ மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம், நாராயணீயம், ஸ்காந்த புராணம், ஸ்ரீ தேவீ பாகவதம், ஹாலாஸ்ய மாகாத்ம்யம் இப்படிப் பல புராண இதிகாசங்கள் அவர்களுக்கு மனப்பாடமாகிவிட்டிருக்கின்றன. ஒரு சுலோகத்தை ஒரு தடவை அல்லது இரண்டுதடவை கருத்தூன்றிப் படித்துவிட்ட உடனே அது அவர்களுக்கு மனப்பாடம் ஆகிவிடுமாம். அதனால் தான் உபந்யாசமேடையில் புஸ்தகத்தைப் பார்க்காமலே பல்லாயிரக்கணக்கான சுலோகங்களை அவர்களால்மழைபோல்பொழிய முடிகிறது.


ஸ்ரீ தீக்ஷிதரவர்கள் நாள் தோறும் அதிகாலை நான்கு

மணிக்கே எழுந்து, தம் சிஷ்யர்களுடன் வேதம் சொல்கிறார்கள். பின்னர் காயத்ரி ஜபம். அதன் பிறகு மீண்டும் வேதம், ஔபாசன அக்னிஹோத்ரங்கள், பஞ்சாயதன பூஜை, வைவஸ்வ தேவம் (அதாவது, அன்னத்தால் அக்னியில் ஹோமம் செய்தல்) இப்படிப் பல சத்கர்மாக்களை நாள்தோறும் தவறாமல் செய்து வருகிறார்கள், தகுதிவாய்ந்த நல்லோர்களுக்கு மந்திரோபதேசமும் செய்கிறார்கள். ஸ்ரீ காமகோடி புதுப் பெரியவாளுக்கு பால்யத்தில் அக்ஷராப்யாசம் செய்துவைத்தவர்கள் இவர்கள் தாம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ புதுப்பெரியவாளின் பூர்வாசிரமப்பிதாவாகிய ஸ்ரீ மஹாதேவ அய்யரவர்களின் உதவியோடு, தீக்ஷிதரவர்கள் ஒரு யஜுர்வேத பாடசாலை ஆரம்பித்துவைத்தார். இவருடைய முன்னோர்கள் நூற்றுக்கணக்கான பிரம்மச்சாரிகளுக்கு உணவளித்து, வேதங்களையும் கற்றுக் கொடுத்தவர்கள். அந்தமாதிரியெல்லாம் இப்போது செய்ய இயலாத காலமாய் இருப்பதால் அதற்கு பதிலாக ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் தம்முடைய பாட்டனாராகிய ஸ்ரீ மஹா குரு முத்தண்ணா அவர்களின் சமாதியில் ஒரு வேதபாடசாலையை நிறுவி, கடந்த 20 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள். ருக்வேதம், கிருஷ்ணயஜுர்வேதம், சுக்லயஜுர்வேதம், சாமவேதம் இந் நான்கும் அதில் கற்பிக்கப்படுகின்றன. சுமார் 22 மாணவர்கள் கற்று வருகிறார்கள். அத்துடன், சென்னையை அடுத்த குரோம்பேட்டையிலும் ஒரு வேத பாடசாலை கட்டி முடித்திருக்கிறார்கள். சேலத்தை அடுத்த ஒரு மலையிலேயும் ஒரு வேத பாடசாலை. அங்கு ஓர் அனுமார் கோயிலும் உருவாகிக்கொண்டு வருகிறது. அங்கேயே தம் இறுதிக்காலத்துக்கான சமாதியையும் அவர்கள் நிறுவ எண்ணியுள்ளார்கள்.

உபந்யாசர்களுக்குள்ளே ஒரு திலகம்போல் விளங்குபவர் தீக்ஷிதர் பெருமான். அவர்கள் உபந்யாசக சக்ரவர்த்தி, அமிருதவாக்வர்ஷி, வைதிக தர்ம ஸம்ரக்ஷகர், பிரவசன துரீணர், வேதயாக பரிபாலகர், ராமாயண தத்வ உபதேசகர், ராமாயண கேஸரீ, பாரத ஸிம்மம், மதுரவாங் நிதி, ப்ரவசனவாகீசர் இப்படிப் பலப்பல விருதுகளைப் பெற்று, வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வருபவர்கள். எனினும் அவர்களுடைய சித்தமெல்லாம் துறவறத்தை நாடியே திரும்பி நிற்பதாகத் தோன்றுகிறது. அவர்களது முன்னோர்களில் பலர் சன்யாஸ ஆசிரமத்தைத் தழுவியிருக்கிறார்கள். அவர்களைப் பின் பற்றி, தாமும் அந்த ஆசிரமத்தை மேற்கொள்ள உத்தேசித்திருப்பதாய், அவர்கள் பேச்சோடு பேச்சாய்க் குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீ தீக்ஷிதர் போன்றவர்கள் உலக க்ஷேமத்தின் பொருட்டு நீடூழி வாழவேண்டியவர்கள். சன்யாசத்தின்மூலம் ஆதிசங்கரருக்கு ஆயுள் பெருகியதாம். அதேபோல் ஸ்ரீ தீக்ஷிதர் பெருமானும், தம்முடைய எதிர்கால ஆசிரம மாற்றத்துக்குப்பின்னும் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு இந்நிலவுலகில் வாழுமாறு, இறைவனை வழுத்துவோமாக!



அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
காளி
மார்க்
Kali
mark
ஸ்டூடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாருத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

காவல்காரப் பெருமாள்



திருமுருக கிருபானந்தவாரியார்

''தொழுது வழிபடும் அடியர்
காவல்காரப் பெருமாளே''

என்பது பழநித் திருப்புகழ்.

பழநியில் முருகநாதன் என்பவர் சிறந்த முருகனடியார். அவர் நடுத்தரமான வாழ்வில் வாழ்ந்தார். மிகப்பெரிய தனவந்தருமன்று; மிகுந்த ஏழையுமன்று. பழநியப்பனிடத்தும், பழநியாண்டவனுடைய அடியார்களிடத்தும் ஆழ்ந்த அன்பு பூண்டவர்.

தன்னால் முடிந்தமட்டும் பிறருக்கு உதவி புரிவார். நாள்தோறும் மலையேறி ஞான தண்டாயுதபாணியை உள்ளம் உருகி வழிபடுவார்,

இத்தகைய அன்பர் யாத்திரை செய்ய வேண்டும் என்று கருதினார்.

''மூர்த்தி தலந் தீர்த்தம்
முறையாய்த் தொடங்கினர்க்
கோர், வார்த்தை சொல்ல
சற்குருவும் வாய்க்கும்
பராபரமே''

என்றபடி க்ஷேத்திர யாத்திரை, தீர்த்த யாத்திரை செய்து, பாவ விமோசனம் பெற்று, பிறவிப் பெரும் பயனை யடையுமாறு நினைந்தார்.

தன் வீட்டில் பிள்ளைபோல் வளர்த்த ஒரு பணியாளனைக் காவலுக்குவைத்துவிட்டு, மனைவியுடன் ஆறுபடைவீடுகளையும் தரிசிக்குமாறு சென்றார்.

ரங்கன் என்ற அவன் அவரிடம் இளமையில் இருந்து வளமையாக வளர்ந்தவன்.

முருகநாதருடைய வீட்டில் தனியேயிருந்தான். அவன் மனத்தில் சூதும் வாதும் குடிபுகுந்தன. முருகநாதருடைய வீட்டில்உள்ள உடைமைகளைக் கவர்வதற்கு என்ன வழி என்று ஆலோசித்தான். தானே எடுத்தாலஉலக நிந்தைக்கு ஆளாக நேரும். ஒரு கள்

ளன் மூலமாகக் கவர்ந்துவிட வேண்டும் என்று கருதித் திட்ட மிட்டான்.

பழநிக்கு அருகிலே உள்ள ஒரு மலையடிவாரத்தில் குள்ளன் என்ற கள்ளன் வாழ்ந்தான். அவனிடம் போய், 'நீ இன்றிரவு (முருக நாதருடைய வீட்டு அடையாளம் சொல்லி) தோட்டத்துப் பக்கம் வா. நான் கதவைத் திறந்து கள வுக்கு உளவாக உதவிசெய்வேன். நீ திருடிக்கொண்டு போ. பிறகு திருடியதில் எனக்குப் பாதி கொடு' என்ருன்.

அவன் பஞ்சாமிர்தம் சாப்பிட் டதுபோல் அப்படியே ஆகட்டும் என்ருன்.

அன்றிரவு 12 மணி. எங்கும் ஓரே நிசப்தம். மரங்களில் ஆந்தை மட்டும் கீச் கீச் என்று கத்திக்கொண்டிருந்தது. இருள் சூழ்ந்து உலகம்முழுவதும் மாயை யில் மூழ்கி இருந்தது.

கள்ளனுகிய குள்ளன் புறப்பட் டான். எதிரில் அரவம் குறுக் கிட்டது. மெல்ல, பழநியம் பதியை அடைந்தான். பக்த மணியாகிய முருகநாதருடைய இல்லத்தின் தோட்டத்தின் பக் கம் வந்து நின்ருன்.

ரங்கன் பின் கதவைத் திறந் தான். கள்ளன்உள்ளே நுழைந்து திருட முயன்ருன். பழநியாண்ட வர் இதனைத் திருவுளம்பற்றினுர். ''பிள்ளைபோல் வளர்த்த ரங்கன் உதவியால் நம் அன்பன் வீட்டில் கொள்ளை நடக்கின்றது. அன்ப னைக் காப்பது நம்கடமை'' என்று திருவுள்ளத்துக் கருணையால் நினைந்த எம்பிரான் ஞான தண் டாயுதபாணி, ஒரு சுக்குமாந்தடி யுடன், கரிய திருமேனியுடன், திரண்டு உருண்ட புயத்துடன் மானிடச் சட்டை தாங்கி வந்த ருளித் தெருக்கதவைத் தட தட என்று தட்டினுர். கள்ளனும் ரங்கனும் பதறிவிட்டார்கள். ரங் கன் 'யார் கதவைத் தட்டுவது?' என்று கேட்டான். 'நான்தான் முருகநாதர் ஆள். ஐயா ஓர் அவ சரத் தகவல் அனுப்பியுள்ளார். கதவைத் திற' என்று அதட்டி ஞர் தண்டாயுதபாணி.

உடனேரங்கன்கள்ளனைப் பஞ்சு மெத்தையில் தலையணைபோல் சுருட்டி ஒரு மூலையில் சாத்தி விட்டுவந்து கதவைத் திறந்தான். தடியுடன் உள்ளே நுழைந்த அந்த வீரன், ''ஐயா, இந்த வீட்டு முதலாளி அனுப்பினுர். உனக்கு ஒரு தகவல் சொல்லச் சொன்னுர். அவர் இப்போது திருச்செந்தூரிலே இருக்கின்ருர். என்ன? எல்லாஞ் சுகந்தானே? உன்னைப்போல உத்தமமான ஒரு பணியாள் ஐயாவுக்குக் கிடைத் தது நிரம்ப அதிர்ஷ்டம். நீ உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்ணுத தங்கமான மனிதன்! ஆ! ஆ! உனக்கு எத்தனை விசு வாசம்! ஐயா இன்னும் இரு மாதங்கள் கழித்துத்தான் வரு வார். உன்னை எச்சரிக்கையாக இருக்கச் சொன்னுர். ஐயா படுக் கின்ற படுக்கையில் மூட்டைப் பூச்சி இருந்ததாம். அதை நன் ருகத் தட்டிவைக்கச் சொன்னுர்'' என்று கூறி, மெத்தையைச் சுருட் டியவண்ணம் தூக்கி வாசலில் தொப் என்று போட்டு, கையில் இருந்த சுக்குமாந்தடியால் நையப் புடைத்தார்.

கள்ளனுடையஎலும்புகள் நிலை குலைந்தன! கருணையால் அவன் உயிர் போகாமல் அடித்து 'ரங்கா, எல்லாம் சரியாகிவிட்

டது. எடுத்துப் படுக்கையை உள்ளே வை. நான் வருகின்றேன்' என்று கூறித் திருவுரு மறைந்தருளினுர்.

கதவைத் தாளிட்டு வந்து ரங்கன் படுக்கையைப் பிரித்தான். கள்ளன் மயங்கிக் கிடந்தான். அவன் வாயில் தண்ணீர்வார்த்து உபசரித்தான். விடிந்த பின் மெல்ல அவனை அகற்றினுன்.

கள்ளன் உடம்பு மெல்ல மெல்லத் தேறியது. பிறகு ஒருநாள் ரங்கன்போய், ''இன்று வா, நாம் நமது காரியத்தை முடிக்கலாம்'' என்ருன்.

அதன்படியே கள்ளன் நள்ளிரவில் வந்தான். ரங்கன் தோட்டத்துக் கதவைத் திறந்தான். கள்ளன் உள்ளே வந்தான். தட தட என்று தெருக்கதவு தட்டும் சத்தம் எழுந்தது. ரங்கன் கள்ளனை நெல் கொட்டும் குதிருக்குள் இறக்கிவிட்டுக் கதவைத் திறந்தான். முன் வந்த அதே ஆள். ஏழு வண்டிகளில் நெல் கொணர்ந்து வந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

''ஐயா! வீட்டு முதலாளி நெல் பிடித்து அனுப்பியுள்ளார். குதிரிலே கொட்டச் சொன்னுர்'' என்று ஒவ்வொரு மூட்டையாகத் தூக்கி குதிரில் கொட்டலானுர் வேலவர். கள்ளன் நெல்லடிப்பட்டுத் துன்புற்ருன். விடிகின்றவரை பழனியாண்டவர் நெல் மூட்டைகளை கூடத்திலும் பிற இடங்களிலும் அடுக்கிவிட்டுச்சென்ருர். ரங்கன் ஏணி வைத்துக் கள்ளனை இறக்கினுன். கள்ளன் தப்பித்து ஓடி ஒளிந்தான்.

மறுநாள் முருகநாதர் இல்லத்தையடைந்தார். எங்கும் நெல் மயமாக இருப்பதைக் கண்டார். ரங்கனைக் கேட்டார். 'நீங்கள்தானே அனுப்பினீர்கள்?' என்ருன். இது பழனியப்பனுடைய திருவிளையாடல் என்று எண்ணி, ''என்னையனே! என்னையும் ஒரு பொருளாகக் கருதி என் இடர் தவிர்க்க வந்தனையோ!'' என்று துதித்துத் தொழுதார், அழுதார்.

ஆதலால் இளம்பூரணனன் தன் அடியார்களுக்குக் காவல்காரனுக வந்து திருவருள் புரிவான். ○

திருச்சிற்றம்பலம்

அருட்பெரு வெளியில் அருட்பெரு உலகத்
தருட்பெருந் தலத்துமே னிலையில்
அருட்பெரும் பீடத் தருட்பெரு வடிவில்
அருட்பெருந் திருவிலே யமர்ந்த
அருட்பெரும் பதியே! அருட்பெரு நிதியே!
அருட்பெருஞ் சித்தியென் னமுதே!
அருட்பெருங் களிப்பே! அருட்பெருஞ் சுகமே!
அருபெருஞ் ஜோதியென் னரசே!

தருணமிஞ் ஞான்றே சுத்தசன் மார்க்கத்
தனிநெறி யுலகெலாந் தழைப்பக்
கருணையுஞ் சிவமே பொருளெனக் கருதுங்
கருத்துமுற் றெம்மனோர் களிப்பப்
பொருணிறை யோங்கத் தெருணிலை விளங்கப்
புண்ணியம் பொற்புற வயங்க,
அருணயந் தருள்வாய்! திருச்சிற்றம் பலத்தே
அருட்பெருஞ் ஜோதியென் னரசே!

—திருவருட்பா

பக்தியும் பாண்டித்தியமும்



ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

கல்விச் செருக்கும், செல்வச் செருக்கும் உடையவர்களுக்கு ஞானம் உண்டாகாது. மகாத்மா ஒருவரைப் பார்த்து வரலாம் என்று அவர்களை அழைத்தால் ஏதாவது சாக்குச் சொல்லி அவர்கள் வரமாட்டார்கள். உள்ளூற மனதுக்குள் அவர்கள், ''பெரிய அந்தஸ்திலிருக்கிற நாம் மற்றவர்களைப் பார்க்கப் போவது எதற்கு?'' என்று நினைத்துக் கொள்கின்றனர்.

வெறும் பாண்டித்யம் மனிதனுக்கு உதவாது. அதனால் வெம்பிய பழம்போன்று அவன் ஆகிவிடுகிறான். காயின் சத்தோ பழத்தின் சுவையோ அதனிடத்து இல்லை.

வெறும் பாண்டித்தியத்தில் பயன் ஒன்றுமில்லை. கற்பதெல்லாம் கடவுளைக் காண்பதற்கான உபாயத்தைத் தெரிந்து அனுபூதியடைய முயலுதல் பொருட்டேயாம்.

கழுகு வானத்தில் உயரப் பறக்கிறது. ஆனால் அதன் கண் கீழே தரையில் உள்ள பிணத்தை நாடுகிறது. வெறும்வாசாஞானிகளாகிய பண்டிதர்கள் கழுகு போன்றவர்கள். அறிவிலே வானுற உயர்ந்தவர்களாகத் தென்படுகின்றனர். ஆனால் அவர்கள் நாட்டம் எல்லாம் காமத்திலும் காசு ஆசையிலுமேயாம். அஞ்ஞான உலகில் அவர்கள் உழல்கின்றனர்.

வெறும் பாண்டித்தியத்தாலாவதென்ன? அருள் தாகம் பிடித்தவனாய் ஒருவன் இறைவனை ஆவலுடன்நாடுவானாகில், அவ்விறைவனை அவன் அடையப்பெறுகிறான். எண்ணிறந்த உலக விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

சாஸ்திர ஆராய்ச்சி எவ்வளவு காலத்துக்குப் பயன்படுகிறது?

சாதனத்தின் ஆரம்ப தசையில் சாஸ்திர ஆராய்ச்சி பெரிதும் பயன்படுகிறது. ஆனால் பக்தியில் ஆழ்ந்து செல்லுகிற சாதகன் ஒரு

வன் சாஸ்திர ஆராய்ச்சியெல்லாம் நிறுத்திவிடுகிருன். அன்னை பராசக்தியின் அருளால் அவன் வாயினின்று வருபவைகளெல்லாம் அருள்மொழிகள் ஆகின்றன.

சிறுவன் ஒருவன் புதிதாக எழுதிப் பழகும்பொழுது, ஒவ்வொரு அக்ஷரத்தையும் தனித் தனியாக உச்சரிக்கிருன். ஆனல் கல்வியில் மேலே போயான பிறகு அப்படிச் செய்யவேண்டியதில்லை. சாஸ்திர ஆராய்ச்சி பண்ணுவது சிறுவன் புதிதாக எழுதப் பழகுவதற்கு ஒப்பானது.

வெறும் சாஸ்திர ஆராய்ச்சி நன்மை எதையும் விளைவிக்காது. உலகப்பற்றுடையவன் சாஸ்திரங்களை எவ்வளவு படித்தாலும் அவைகளின் உட்கருத்தை அவன் கிரகித்துக்கொள்ளமாட்டான்.

சமயப் பற்றின் பெயரால் தெய்வத்தின் எந்த வடிவத்தையும் இகழாதே. காளியாகவும் ஹரியாகவும் சிவமாகவும் வடிவெடுத்திருப்பது ஒரே தெய்வம். இத்தனை வடிவங்களில் இருப்பது ஒரு பொருளே என்பதை அறிந்துகொண்டவன் பாக்கியவான்.

அளவுக்கு மிஞ்சிய விவாதம் ஆத்மசாதனத்துக்கு உதவாது. ஒரு சிறு குட்டையில் தேங்கியிருக்கிற ஜலத்தைக் கலக்காது எடுத்து அருந்தவேண்டும். அதே விதத்தில், உள்ளத்தினுள் வீண் விவாதத்தின்மூலம் குழப்பத்தை உண்டுபண்ணுவதற்குப் பதிலாக பக்தியை வளர்க்கவேண்டும்.

குருடர்கள் சிலர் யானை என்று அழைக்கப்படும் மிருகம் ஒன்றைப் பார்க்கச் சென்றனர். அதன் காலைத் தடவிப் பார்த்தவன் அது தூண் போன்றிருக்கிறது என்ருன். வயிற்றைத் தடவிப் பார்த்தவன் சுவர்போன்று இருக்கிறது என்ருன். காதைத் தடவிப் பார்த்தவன் முறம் போன்று இருக்கிறது என்ருன். வாலைத் தொட்டுப் பார்த்தவன் கயிறுபோன்று இருக்கிறது என்ருன். அதேவிதத்தில், கடவுளின் இரண்டொரு அம்சங்களைமட்டும் அறிந்துகொள்கிறவர்கள் ''அவர் இப்படியிருக்கிருர்; அப்படியில்லை''யென்று வீண் விவாதம் செய்கின்றனர்.

சாஸ்திர ஞானத்தை ஒருவன் ஏராளமாகப் பெறலாம். ஆனல் அவனிடத்து பகவத் பக்தியும் அருள் தாகமும் இல்லாவிட்டால் ஏட்டுக்கல்வி அனைத்தும்அனர்த்தமாய்ப் போய்விடும்.

சாஸ்திரங்களை ஏராளமாகக் கற்பதால் மனிதனுக்கு ஆவதென்ன? ஈசனை அடைந்து பிறவிப் பெருங்கடலைத் தாண்ட மனிதன் கற்றுக்கொண்டால் போதுமானது.

நூலறிவு இல்லாது பரம்பொருளை அறிந்துகொள்ள முடியாது என்றுபலர் கருதுகின்றனர். பரம்பொருளைப்பற்றிய ஞானம் நூலறிவால் ஒரு பொழுதும் வாய்க்காது எனபதை அவர்கள் அறிந்துகொள்வதில்லை.

மதவாதிகள் அவரவர் மதத்தில் கூறியிருக்கும் தெய்வமே பெரிய பொருள் என்று ஓயாது வாதாடுகின்றனர். ஒரு பொருளே இத்தனையுமாய் ஆயிருக்கின்ருர் என்பதை அவர்கள் அறிந்துகொள்வதில்லை.

நான்கு வேதங்களிலும், ஆறு சாஸ்திரங்களிலும், தந்த்ர சாஸ்திரங்களிலும் ஈசனைக் காண முடியாது. ஆனல் இந்த சாஸ்திரங்களில் அடங்கியுள்ள விஷயங்களை ஒருவன் அறிந்துகொண்டு அவைகளுக்கேற்ப ஒழுகவேண்டும்.

சாஸ்திரங்கள் பல இருக்கின்றன. ஆனால் சாஸ்திரங்களைக் கொண்டு கடவுளை அறிந்து கொள்ள முடியாது. அதற்குத் தபசும் நியமங்களும் தேவை.

வெறும் சாஸ்திர ஆராய்ச்சியால் ஒரு நலனும் உண்டாகாது. வெறும் சாஸ்திர ஆராய்ச்சியிலேயே உழன்று மடிந்தவர் எத்தனையோ பேர். சாஸ்திரங்களின் சாரத்தைக் குருவிடம் இருந்து அறிந்துகொண்டு, சாதகன் ஒருவன் சாதனத்தில் ஆழ்ந்து மூழ்க வேண்டும்.

வருஷத்தில் இத்தனை மரக்கால் மழை பெய்யும் என்று பஞ்சாங்கத்தில் குறித்துவைத்திருக்கிறது. ஆனால் பஞ்சாங்கத்தை எவ்வளவு கசக்கினாலும் ஒரு சொட்டு ஜலம் அகப்படாது. பகவத் விஷயங்களைப்பற்றி சாஸ்திரங்களில் சொல்லி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சாஸ்திரங்களுக்கு விதவிதமான வியாக்கியானங்கள் கொடுத்து அவைகளைப் புரட்டுவதால் பகவானை அறிந்து கொள்ள முடியாது.. அவரை அறிந்துகொள்ளுதற்கு பக்தியும் மனத்தூய்மையும் வேண்டும்.

யானையை அங்குசத்தால் தலையில் அடிக்கிறபொழுது அதற்கு உடனே உணர்ச்சி வந்து விடுகிறது. ஏனென்றால் யானைக்குத் தலைதான் மர்ம ஸ்தானமாயிருக்கிறது. மதவெறி பிடித்திருக்கிற ஒருவனுக்கு அவன் மதத்திலுள்ள குறைபாட்டை எடுத்துக்காட்ட வேண்டும். அப்பொழுதுதான் அவனுக்கு மெய்யுணர்வு வருகிறது.

ஈசுவர சாக்ஷாத்காரம் அடையப்பெற்ற அனுபூதிமான்கள் வெறும் சாஸ்திரஞானம் படைத்துள்ள பண்டிதர்களைத் துரும்பாகக் கருதுகின்றனர்.

○

உ

திருச்சிற்றம்பலம்

தங்கமே யனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்க
சங்கமே கண்டு களிக்கவும், சங்கஞ்
சார்திருக் கோயில்கண் டிடவும்
துங்கமே பெறும்சற் சங்கம்நீ டூழி
துலங்கவும், சங்கத்தி லடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய்.

கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடுந்துய ரச்சமா திகளைத்
தருணநின் னருளால் தவிர்த்தவர்க் கின்பந்
தரவும்வன் புலைகொலை யிரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உஞற்றவும், அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும், நின்னை
வாழ்த்தவும் இச்சைகா ணெந்தாய்.

—திருவருட்பா

யானையை வெறுத்த அரசன்



ஜகத்குரு
ஸ்ரீகாமகோடி ஆச்சார்யாள்

மதுவனமென்று ஒரு க்ஷேத்திரமிருக்கிறது. அதற்குத் தமிழில் நன்னிலமென்று பெயர். அந்த க்ஷேத்திரத்தில் வண்டுகள் மஹாலிங்கத்தைப் பூஜிப்பதாக ஐதிஹ்யம். இன்றுவரையில் தேனடை அந்த ஆலயத்தில் காணப்படுகிறது. ஆகையினால்தான் அதற்கு மதுவனம் என்று பெயர்.

ஆதியில்கோச்செங்கட்சோழன் என்று ஒரு சோழ அரசன் இருந்தான். கோ என்றால் கிரீடத்தை உடைய அரசன் என்று அர்த்தம். செங்கண் என்றால் சிவந்த கண்கள் என்று அர்த்தம். ஸமஸ்கிருதத்தில் 'ரக்தாக்ஷசோல' என்றும் சொல்லுவார்கள். அந்த சோழ அரசன் பெரிய சிவபக்தன். அவன் அநேக கோயில் திருப்பணிகளைச் செய்திருக்கிறான். அந்தத் திருப்பணிகளுக்கு 'யானையேறாத் திருப்பணி' என்று பெயர். அதாவது, யானை உள்ளே ஏறாதிருக்கும்படி குறுகலாகக் கட்டப்பட்டிருக்கிற கோயில்கள் என்று அர்த்தம். இதனாலேயே இதற்கு முன்னால் யானை போகும்படியாயிருந்தனவென்று தெரிகிறது.

ஆதிகாலத்தில் அநேக நதிதீரங்களிலும் வனப் பிரதேசங்களிலும் மரங்களின் அடிகளிலும் மஹரிஷிகள் மஹாலிங்கத்தை ஆத்மார்த்தமாகப் பூஜை செய்து வந்தார்கள். அந்த ஸமயங்களில் இதர ஜனங்கள் அணுகாமல் இருந்தார்கள். அப்பேர்ப்பட்ட சிவ பூஜைகள் கலியுகத்தில் பரார்த்தமாக உபயோகப்படுவதற்கு அரசர்கள் ஏற்பாடு செய்து, ஆகமப்பிரகாரம் திருப்பணிகள் செய்தார்கள். எந்நாளும் பிராம்மணர்களுடைய ஸந்தியாஜபமும் சிவபூஜையும் நடைபெறவேண்டுமென்று அரசர்கள் ஏற்பாடு செய்தனர். அதற்காகவும், ஆத்மார்த்தமாக மஹரிஷிகள் பூஜை செய்துகொண்டிருந்த மஹாலிங்கங்களிருந்த இடத்தில் ஆகமப்பிரகாரம் சிவாலயங்களைக் கட்டி அவைகளுக்காகத் தனியாக தீக்ஷைபெற்ற சார்பாரை நியமித்தார்கள்.

ஆகையினால், ஆதியில் இந்தத் தேசத்திலுள்ள சிவாலயங்கள் எல்லாம் மஹரிஷிகளால் ஆத்மார்த்தமான வைதிக பூஜைகளால் பூஜிக்கப்பட்ட மஹாலிங்கங்களாயிருந்து, பின் ஆகமப்பிர

காரம் அரசர்களால் கோயில் கட்டப்பட்டுப் பூஜிக்கப்பட்டு வருகின்றன. ஆகையினுல்தான் இப்பொழுதும் ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் ஸ்தலவிருக்ஷம் காணப்படுகிறது. தில்லைவனம், தேஜினீ வனம் என்ற பெயர்களும் ஏற்பட்டிருக்கின்றன. திருவானைக்காவில் ஜம்பூ விருக்ஷம். காஞ்சியில் ஆம்ரதரு. மல்லிகார்ஜுனம், புடார்ஜுனம், மத்யார்ஜுனம் இந்த க்ஷேத்திரங்களில் அர்ஜுன விருக்ஷம். இவைகளெல்லாம் ஸ்தல விருக்ஷங்களாகக் காணப்படுகின்றன.

திருவானைக்காவில் திருப்பணி நடந்தபொழுது, ஜம்பூ விருக்ஷத்தின் ஒரே ஒரு பட்டை மாத்திரம் பாக்கி இருந்தது, திருப்பணி செய்த காருடுகாத்தான் செட்டியார்கள் அதுவும் போய்விடுமோ என்று கவலைப்பட்டு, அதற்கு ஏகாதசருத்திராபிஷேகம் செய்தார்கள். அந்த மத்திரசக்தியால் அப்பொழுதே அது தளிர்த்து மரமாகத் தழைத்திருக்கிறது. இப்பொழுதும் திருவானைக்காவின் பக்கத்தில் வெண்ணுவல் என்ற ஊர் இருக்கிறது. நாவல் என்று ஜம்பூ விருக்ஷத்தின் பெயர்.

யானையேருத்திருப்பணி என்று ஏன் கோச்செங்கட்சோழன் திருப்பணி செய்யவேண்டும்? யானையின் மேல் அவனுக்குத் துவேஷம் உண்டாயிற்று. பழைய காலத்தில் ஒருவன்மேல் துவேஷமிருந்தால், அவனுக்குச் சிவபக்தி யில்லாமல் போக வேண்டுமென்று சொல்லுவது வழக்கம். அதைத்தான் ஒருவனுக்குச் செய்யும் பெருந்தீங்காக எண்ணிஞர்கள். ஏன் இந்த அரசனுக்கு யானையின் மேல் துவேஷமுண்டாக வேண்டுமென்ருல், அதற்கு ஒரு கதை இருக்கிறது. நாம் ஸ்தலபுராணங்களை நம்பவேண்டும். ஏதோ சில ஸ்தல புராணங்கள் உத்பத்தி செய்யப்பட்டிருக் கலாமென்று தோன்றுவதனுல், எல்லா ஸ்தல புராணங்களும் நம்பத்தக்கவை அல்ல என்று எண்ணக்கூடாது.

தேவாரங்களில் ஒவ்வொரு ஸ்தலத்தினுடைய ஐதிஹ்யங்களும் சொல்லப்பட்டுள்ளன. அந்த ஐதிஹ்யங்கள் புராணங்களில் காணப்படுகிறன. தேவாரங்களுடைய காலமே 1500-வருஷங்களுக்கு மேலே ஆகிறது. அதற்கு முந்தி அநாதியான பிரமாணங்களை வைத்துக்கொண்டு அவர்கள்சொல்லியிருக்கிருர்கள். தேவாரகாலத்திற்குப் பின் வந்தவர்களும் அதே ஐதிஹ்யங்களைச் சொல்லியிருக்கிருர்கள். இப்பொழுதும் அந்த ஐதிஹ்யங்களின் அடையாளங்கள் காணப்படுகின்றன. திருவானைக்காவில் இப்பொழுதும் ஒரு ஜம்பூ விருக்ஷம், அதன்கீழ் லிங்கம், தும்பிக்கையால் அபிஷேகம் செய்வது போல் பக்கத்தில் ஒரு யானை, பக்கத்தில் ஒரு சிலந்திப் பூச்சி இவைகளின்ரூபங்களும், செப்புப் பட்டயம் சாஸனம் இவைகளில் முத்திரைகளும் காணப்படுகின்றன. அதேமாதிரி மதுவனத்தில் தேன்கூடும் காணப்படுகிறது.

திருவானைக்காவில் இந்த அடையாளம் இருப்பதற்குக் காரணமென்னவென்ருல், ஜம்பூ மஹரிஷி என்பவர் ஆதிகாலத்தில் அங்கே தபஸ்செய்து கொண்டிருந்தார். அவர் நீண்டகாலம் தபஸ் செய்து கொண்டிருந்ததனுல், அவர்மேல் புற்று மூடிக்கொண்டு செடிகொடிகள் முளைத்து, ஜம்பூவிருக்ஷம் ஒன்றும் முளைத்தது. அவர் பூஜித்து வந்த மஹாலிங்கத்தை ஒரு சிலந்தியானது பூஜை செய்து வந்தது. அந்த மஹாலிங்கம் திறந்தவெளியில் இருந்ததனுல், அதன்மேல் வெயில்படக் கூடாதென்று அச்சிலந்திப் பூச்சி தன் எச்சிலால்

நூல்பந்தல் போட்டுக்கொண்டே இருந்தது. அந்த லிங்கத்தை ஒரு யானையும் தினந்தோறும் தன் துதிக்கையால் காவேரியிலிருந்து தீர்த்தம் கொண்டு வந்து, மஹா லிங்கத்துக்குஅபிஷேகம்பண்ணிப் பூஜை செய்து வந்தது. அந்த அபிஷேக ஜலத்தால் சிலந்தி போட்ட பந்தல் அழிந்துவிட்டது. அதைக்கண்டு சிலந்திப் பூச்சி கோபமடைந்து, அதனுடைய துதிக்கையினுள் புகுந்து கடித்துவிட்டது. ஆயுர்வேதத்தில் லூதா விஷமானது விஷங்களுக்குள் மிகக் கொடியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. லூதா என்ருல் சிலந்தி என்றுஅர்த்தம். உடனே யானை அந்தச் சிலந்திப் பூச்சியைத் தேய்த்துக் கொன்று விட்டு, அதன் விஷ வேகத்தால் தானும் இறந்துவிட்டது.

அந்தச் சிலந்தியானது கோச் செங்கட் சோழனுக மறு பிறப்பில் பிறந்தது. இறக்கும் ஸமயத்தில் கோபத்தினுல் கண் சிவந்திருந்ததனுல், சிவந்த கண்களையுடைய சோழனுகப் பிறந்தது. ஆகையினுல்தான் அந்தச் சோழ அரசனுக்கு யானையைக்கண்டால் மறு பிறப்பிலும் பரமத் துவேஷமுண்டாயிற்று. அதற்காகவே யானை யேருத் திருப்பணிகளாக 70 க்ஷேத்திரங்களில் செய்தான். அவன் பெரிய சிவபக்தனுக இருந்தான். அவனுடைய சிவபக்தி மஹிமையை ஆழ்வார்கள்கூடப் பெரியதிருமொழியில் சிலாகித்திருக்கிருர்கள். நாச்சியார் கோயில் விஷ்ணு ஆலயத்தைக் கோச் செங்கணுன் நிர்மாணம் செய்தான் என்று சொல்லும் பொழுது, பல சிவாலயங்களைக் கட்டினவனென்று சிலாக்கியமாகச் சொல்லியிருக்கிருர்கள். ○

அனாதைச் சிறுவர்களுக்குப் புகலிடம்

திருச்சி மாவட்டம் திருப்பராய்த்துறையில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலின் தலைவர் திரு. பிரம்மசாரி ராம சுவாமி அவர்கள் பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்:

திருச்சி, திருப்பராய்த்துறையிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் என்னும் ஸ்தாபனம் தமிழக அனாதைச் சிறுவர்களுக்கென்றே ஏற்பட்டுள்ள ஓர் தர்ம ஸ்தாபனம் என்பதை தமிழ் நாடு நன்கறியும். மேற்படி அனாதைச் சிறுவர்களுக்காகவே இங்கு ஹைஸ்கூல் படிப்புவரை பள்ளியும், படிப்பு முடிந்த பின் தொழிற் பயிற்சி பெற இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட்டும் நடத்தப்பட்டு வருகின்றன. உணவு, உடை, இருப்பிடம், கல்வி, தொழிற்பயிற்சி முதலான யாவும் முற்றும் இலவசம்.

இங்கு ஏற்கெனவே நூற்றுக் கணக்கான சிறுவர்கள் புகலிடம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள். மேற்கொண்டும் சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு வருகிறோம். வருடம் பூராவும் எந்தச் சமயத்தில் அனாதைச் சிறுவர்கள் வந்தாலும் மறுக்காமல் எடுத்துக் கொண்டுதானிருக்கிறோம். ஆனாலும், பள்ளியாண்டுப் பருவகாலமாகிய மே, ஜூன் மாதங்களில் தான் அதிகமான சிறுவர்கள்சேர நல்ல வாய்ப்பிருக்கின்றது. அப்படியிருந்தும், நாட்டில் ஆங்காங்கு கவனிப்பாரற்ற அனாதைச் சிறுவர்கள் ஏராளமான பேர் அவல நிலையில் திரிந்து வருவதாகவும், யாரும் முன்வந்து அவர்களை இத்தகைய ஸ்தாபனங்களில் சிறு அளவில் பிரயாணச் செலவு செய்துகூடச்சேர்த்துவிட முயற்சி செய்யாததால் அவர்களுடைய வாழ்க்கை பாழாகிறது என்றும் பலவகையாலும் கேள்விப்படுகிறோம்.

''தமிழகத்தில் தாய் தந்தை இருவருமேயில்லாத திக்கற்ற நிலையிலுள்ள அனாதைச் சிறுவர்களே இல்லை'' என்ற நிலையை ஏற்படுத்த முயலும் இலட்சியத்தில் குடில் சேவை செய்து வருகிறது. ஆகையால், தாய் தந்தை இருவருமேயில்லாத, திக்கற்ற நிலையிலுள்ள அனாதைச் சிறுவர்களை மட்டுமே (தாயோ, தந்தையோ யாரொருவர் இருந்தாலும் வேண்டாம்), 9 வயது முதல் 14 வயதுவரையுள்ளவர்களாகவும், 3-வது வகுப்புக்கு மேல் படிப்புள்ளவர்களாகவும் பார்த்து, இவர்களைத் தமிழகத்தில் யார் கண்டாலும் அத்தகைய சிறுவர்களைப் பற்றி முழு விவரங்களுடன் முதலில் இங்கு விண்ணப்பம் அனுப்பி வைத்தால், அதற்கான பாரம் வகையறாக்கள் இங்கிருந்து அனுப்பி வைக்கப்படும் என்பதை அன்புடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

முக்கியமாகப் பஞ்சாயத்துயூனியன், பஞ்சாயத்து நிர்வாகத்திலுள்ள அதிகாரிகளும், அங்கத்தினர்களும் இதைக் கவனிப்பார்களாக.

தலைவர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண குடில்,

திருப்பராய்த்துறை, (அஞ்சல்)

திருச்சி மாவட்டம்.

விழித்தெழுந்த பாரதம்



ஆசார்ய விநோபா பாவே

பாரதத்தின் அக்காலத்திய மகானான விவேகானந்தர் ஆங்கிலம் முழுவதையும் கரைத்துக் குடித்தவர். ஆனால் நம் நாட்டின் சிறந்த அம்சங்களையே அவர் மிவகு அழகாக உலகிற்கு அறிவித்தார். அரவிந்தர் பிள்ளைப் பிராயம் முதலே படித்தது ஆங்கிலம்தான். அவர் தந்தை அவர்மீது இந்தியக் காற்றே வீசக்கூடாதென்று வெகு ஜாக்கிரதையாய் ஏற்பாடு செய்திருந்தார். 5 வயதான பொழுதே அவரை இங்கிலாந்திற்கு அனுப்பி விட்டார். அங்கே அவர் பிரஞ்சும், ஆங்கிலமும், கிரீக்-லத்தீனும் கற்றார். இவற்றோடு தம் தாய் மொழியான வங்காளியை முற்றிலும் மறந்தார். இவ்வாறு தந்தையின் விருப்பப்படி தம் நாட்டைச் சேர்ந்தவை எல்லாவற்றையும் துறந்து மேல் நாட்டவை அனைத்தும் ஏற்றார். மேல் நாட்டுப் பண்பாட்டிலேயே ஊறிப் போய்விட்டார். விஞ்ஞானம், இலக்கியம், கவிதை, அரசியல், பொருளாதாரம், தத்துவம் ஆகிய எல்லாவற்றையும் கரை கண்டார். ஆனால் அவர் இங்கே திரும்பி வந்ததும் செய்ததென்ன? உபநிடதங்களை ஓதினார்; வேதத்திற்கு உரையெழுதினார்; கீதையை ஆராய்ந்தார்; புதிய யோக முறையொன்றை உலகிற்கு நல்கினார். இவ்வாறு இந்தியப் பண்பாட்டை அவர் மேலும் ஒளிபெறச் செய்தார். இவ்வாறு இவ்விரு பண்பாடுகளின் சேர்க்கையினால் சிறந்த பயன் விளைந்தது.

மகாத்மா காந்தியும் இரு பண்பாடுகளின் சேர்க்கையின் விளைவே. அவர் மேல் நாட்டுத் தத்துவங்களைக் கற்றதோடு அவற்றில் நம் தத்துவங்கள் முழுவதையும் கலந்து விட்டார். இதனால் மிகவும் சிறந்த பயனே விளைந்தது. நாடு விழித்தெழுந்ததும் அதன் ஆற்றல் வெளியாயிற்று. சிங்கமோ, புலியோ, கழுதையோ உறங்கி விழித்த பிறகும், அவற்றின் சுபாவம் மாறாது. சிங்கம் சிங்கமாகவும், புலி புலியாகவும், கழுதை கழுதையாகவுமேதான் இருக்-

கும். ஆனால் உறங்கிய பாரதம் விழித்தெழுந்ததும், அதனிடம் அதன் பண்டைச் சிறப்புக்கள் இருந்ததோடு, அதுபுதிய அழகும் பெற்றுப் பொலிந்தது.

ஸ்ரீ அரவிந்தர் ஒரு காலத்தில் இந்தியாவின் அரசியல் தலைவராக இருந்தவர். அவர் கீதைக்கு பேருரை யொன்று வரைந்தார். மகாத்மா காந்தி இந்தியாவின் பெரிய அரசியல் தலைவர்; அவரும் கீதைக்கு உரை எழுதினார். லோகமான்ய திலகர் இந்தியாவின் அரசியல் தலைவர்; அவரும் கீதைக்கு உரை எழுதினார். இவற்றிலிருந்து வெளியாவதென்ன? இவர்களெல்லாம் தம் முன்னோரின் பரம்பரைச் சொத்தைக் கைடாதிருந்ததோடு தாமும் அதை மேலும் பெருக்கி வளப்படுத்தினார்கள். இவ்வாறு பாரதம் விழித்தெழுந்தது.விழித்ததன் பயனாகப் புதிய சாதனைகள் புரிந்து சுதந்திரம் பெற்றது. இதனால் விரோதிகளாய் இருக்க வேண்டிய பாரதமும் இங்கிலாந்தும் இப்பொழுது நெருங்கிய நண்பர்களாக இருந்து வருகின்றன.

பண்டித நேருவை ஆங்கிலேயர்கள் 17 ஆண்டுகள் சிறையில் வைத்திருந்தார்கள். இவ்வளவு வாட்டியிருந்தும் அவர் மனத்தில் ஆங்கிலேயரிடம் சிறிதும் வெறுப்போ துவேஷமோ இல்லாதிருப்பது ஆங்கிலேயருக்கே வியப்பாயிருக்கிறது.இதுகுறித்து மிகவும் ஆச்சரியப்பட்டவர் சர்ச்சில். இந்த அற்புதம் மகாத்மா காந்தி அளித்த பயிற்சியின், போதனையின் விளைவு. மகாத்மா காந்தி இதை எங்கே கற்றார்? பண்டைக் காலம் முதலே நம் நாட்டில் வழங்கும் தத்துவம் ஒன்றுண்டு. அதாவது, 'விரோதத்தினால் விரோதம் நீங்காது. அன்பினாலேலேயே நீங்கும். அன்பிலேயே சக்தி உண்டு' என்பது. பாரதத்தின் இக்குரலையே காந்திஜி நாட்டில் எழுப்பினார்.

இதைக்கேட்டு மக்கள் விழித்து எழவும், அவர்களைக் கொண்டு சுயராஜ்யப் போர் நடத்தி வெற்றி பெற்றார். ஆனால் இதில் துவேஷமே இடம் பெறவில்லை. சுதந்திரம் பெறுவதற்குக் கையாளப்பட்ட இந்தப் புதிய சாதனத்தின் அற்புத சக்தியை என்னென்பது! ஒரு தேதி குறிப்பிட்டு அன்று வெள்ளையர்கள் இங்கிருந்து கிளம்பிப் போய்விட்டார்கள். உலக வரலாற்றில் இவ்வாறு எங்குமே நடந்ததாகக் கேள்விப்பட்டதில்லை. இது சுதந்திரப் போரா? பிள்ளைகளின் விளையாட்டுப் பந்தயம் போலல்லவா இருக்கிறது! பந்தயத்தில் ஒரு கட்சி ஜெயித்து ஒரு கட்சி தோற்றாலும், எல்லோரும் கை குலுக்கிவிட்டுக் களிப்புடன் வீடு திரும்புவதைப் போலவே இதெல்லாம் நடந்தது. அதாவது சுதந்திரப் போரையும் நாம் புதியதொரு முறையில் நடத்தினோம். இந்தப் புதிய கருத்து, புதிய தத்துவம் தோன்றியது இந்தியாவில் ஆகும். அரசியல் துறையிலும் அஹிம்சையைக் கடைப்பிடித்து வெற்றி பெறலாம் என்பது இதனால் ருசுவாயிற்று.

❋



அகஸ்தியருக்கு ஹயக்ரீவர் கூறிய இரகசியம்

ஸ்ரீ C.V. ஸ்வாமி சாஸ்திரிகள்

காமேஸ்வரனின் இடது துடையில் மிக அழகாகவீற்றிருப்பதும், ஸ்ரீ வித்யோபாஸகர்களுக்கு மூன்ருவது புருஷார்த்தத்தையே (அதாவது, போகத்தையே) நான்காவது புருஷார்த்தமாக (அதாவது, மோக்ஷமாக) ஆக்கிக் கொடுப்பதும் (அல்லது, மூன்ருவது அவஸ்தையாகிய சுஷுப்தியையே நான்காவது அவஸ்தையாகிய துரீயமாக ஆக்கிக் கொடுப்பதும்), முப்புரங்களையும் வியாபித்திருப்பதும், மகாப் பிரகாசமாய் விளங்குவதுமான அந்த வஸ்து (அதாவது, பரதேவதை), உங்களுக்கு உயரிய நன்மையை அளிக்கட்டும்!

வேதங்கள், வேதாங்கங்கள் முதலியவற்றில் கரைகண்டவராகவும், சகல சித்தாந்தங்களின் சாரத்தை அறிந்தவராகவும், பிரம்மானந்த ரசானுபூதியில் திளைப்பவராகவும் விளங்குகிற அகஸ்தியர் என்னும் தேவரிஷியானவர்;

அநேக அற்புதங்களுக்குக் காரணமான பற்பல தீர்த்தங்கள், தேவாலயங்கள், மலைகள், வனங்கள், தேசங்கள் இவற்றையெல்லாம் சுற்றிப்பார்த்துக்கொண்டு;

ஆங்காங்கே வாழ்ந்து வருகிற மக்கள் எல்லோருமே அஞ்ஞானத்தில் மூழ்கியவர்களாய், எப்போது பார்த்தாலும் இரை தேடுவதிலும் இனத்தைப் பெருக்குவதிலுமே பொழுதைக் கழித்து வருவதைக்கண்டு மிகவும் வருத்தமுற்றவராய்:

மகாப் புண்ணிய பூமியாகிய காஞ்சிமா நகரத்துக்கு வந்து சேர்ந்தார்.

அந்த நகரத்திலே, ஹஸ்திகிரி நாதனுன வரதராஜப் பெருமாளேயும், ஏகாம்ரநாதனுன சிவபெருமானேயும், கலிதோஷத்தைப் போக்குபவளான அன்னே காமாக்ஷி தேவியையும் முறைப்படி தரிசனம் செய்துவிட்டு;

மகரிஷியாகிய அகஸ்தியர் மகாவிஷ்ணுவை நோக்கித் தவம் புரியத் தொடங்கினுர்.

அவர் நெடுங்காலம் தவம் புரிந்த பிறகு, அந்தத் தவத்தினுல் மகிழ்ச்சியடைந்த மகாவிஷ்ணு;

சங்கு, சக்கரம், ஜபமாலே, புஸ்தகம் இவற்றைத் தமது நான்கு கைகளிலும் தாங்கியவராய்,

எட்டுத் திக்குகளிலும் ஒளி வீசுகிற சின்மயமான சரீரத்தை உடையவராய்,

குதிரைத்தலேயோடு கூடியவராய்,

அதன் காரணமாக ஹயக்ரீவர் என்னும் பெயர் படைத்தவராய்,*

அகஸ்தியர் முன்பு காட்சியளித்தார்.

அவரைக் கண்டதும் அகஸ்தியர் ஆனந்தக் கடலில் மூழ்கினவராகி, அவருடைய பாதங்களில் வீழ்ந்து பன்முறை வணங்கி, உள்ளம் உருகி ஸ்தோத்திரம் செய்தார்.

அப்போது அந்த ஜகந்நாதனுன மகாவிஷ்ணு, ''அகஸ்தியரே, உம்முடைய தவத்தினுல் நான் பெரிதும் களிப்படைந்தேன். உமக்கு மங்களம் ஏற்படப் போகிறது. உமக்கு வேண்டியதைக் கேட்பீராக!'' என்று கருணேயோடு கூறினுர்.

அகஸ்தியர் தமக்காக எந்த ஒரு வரத்தையும் கேட்காமல், உலக மக்களின் க்ஷேமத்திலேயே நாட்டம் உடையவராய், ''பிரபோ, இந்த மக்கள் எல்லாம் தமது அஞ்ஞானத்திலிருந்து விடுதலே பெற்று, நல்ல உயர் நிலேயை அடைவதற்கு ஏதேனும் வழியிருக்கிறதா? இருந்தால் அதை எனக்குக் கூறியருள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு ஹயக்ரீவர் சொன்னுர்:

''மகரிஷியே! முற்காலத்தில் பரமேஸ்வரனும் பிரம்மதேவரும் இதே கேள்வியைத்தான் என்னிடம் கேட்டார்கள். பிறகு துர்வாஸ முனிவரும் கேட்டார். இப்போது நீர் கேட்கிறீர். நீர் உலகத்துக்கெல்லாம் குருவாக விளங்குகிறபடியால், நான் இப்போது சொல்லப் போகும் விஷயமானது, உமது வாயிலாக உலகு அனேத்தும் பரவி விளங்கட்டும்!''

இவ்வாறு அருள் பாலித்த ஹயக்ரீவர் மேலும் கூறினுர்:

''எல்லாப் பிராணிகளுக்கும் முதல்வன் நானே. எல்லாவற்றிற்கும் நானே பிரபு. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களேச் செய்யும் மும்மூர்த்திகளாகவும் நானே

---

* ஹயம் என்ருல் குதிரை. க்ரீவர் என்ருல் கழுத்து. எனவே, ஹயக்ரீவர் என்ருல், குதிரைக் கழுத்தை (அதாவது, குதிரைத் தலேயை) உடையவர் என்று பொருள்.

தான் விளங்குகிறேன். எனினும் நான் முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டவன். நான் எதையும் ஆதாரமாகவோ பற்றுக்கோடாகவோ கொண்டவன் அல்ல. நான் எதற்கும் கட்டுப்பட்டவனும் அல்ல. நான் என் விருப்பம் போல் இருப்பவன். அந்த முறையில், எல்லாப் பிராணிகளாகவும் நானே தான் இருக்கிறேன். எனக்குப் பிரகிருதி, புருஷன் என இரண்டு வடிவங்கள் உண்டு.*

''இவற்றுள் பிரகிருதியானது, எல்லாப் பிராணிகளிடத்திலும் சத்துவகுணம், இரஜோகுணம், தமோகுணம் என்னும் முக்குணங்களாகக் காட்சியளிக்கும். புருஷன் என்பது, அம்முக்குணங்களுக்கும் மேலானது. இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றை அறிந்தாலே, மனிதன் விடுதலை அடைந்து விடுவான். அப்படியானல் இரண்டையும் அறிந்தவனைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

''நெடுங்காலம் தவம் செய்வதாலும், இயமம், நியமம் இவற்றைக் கடைப் பிடிப்பதாலும், தியாகத்தினுலும் பாபங்கள் நாசம் அடையும்போது, மனிதன் பிரகிருதியை அறிந்து விலகி நின்று முக்தியை அடைகிறுன்.

''ஆனுல், இது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அபாயம் இல்லாததாகவும் எளிதாகவும் இருப்பது, ஆத்மாவை அறிந்து விடுதலை பெறுவதே ஆகும். அதுவே எல்லா மேன்மைகளையும் கொடுக்கக்கூடியது.

''தர்மத்தைக் கைவிட்டவர்களாகவும் பாபிகளாகவும் இருக்கும் மனிதர்களுக்கு, எந்த அம்பிகையின் வடிவத்தைத் தியானம் செய்தால் கெட்ட காரியங்களும் நல்ல காரியங்களாக மாறிவிடுகின்றனவோ;

''அந்தப் பராசக்தியை ஒருவன் முறைப்படி பூஜை செய்தாலும் சரிதான், அல்லது முறை தவறியே பூஜை செய்தாலும் சரிதான், அவன் நிச்சயமாகத் துன்பக் கடலிலிருந்து கரையேறி, ஜீவன் முக்தன் ஆகிவிடுகிறுன்.

''அவளைப் பூஜை செய்ததாலும் தியானம் செய்ததாலுமே, பரமசிவன் எல்லாசித்தர்களுக்கும் இறைவனுகவும், அர்த்தநாரீஸ்வரனுகவும் விளங்குகிறுன்.

''எனவே, உலகில் உள்ள மனிதர்கள் போகத்தையும் மோட்சத்தையும்§ ஒருங்கே அடைய விரும்பினுல், அவர்கள் அந்தப் பரதேவதையைத்தான் ஆராதனம் செய்ய வேண்டும். அதைத் தவிர வேறு வழியே கிடையாது.

''ஆகையால், ஒருவன் அந்த தேவியின் மந்திரங்கள், நியாசங்கள் முதலியவற்றை முறையாகப் பயின்று, அவளிடத்திலேயே தன் சித்தத்தைச் செலுத்திப் பூஜை

---

* புருஷன் என்பது ஆன்மா; அதாவது, தூய உயிர். பிரகிருதியென்பது, அந்த உயிரல்லாத மற்ற எல்லாப் பொருள்களும் எதனுல் ஆக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்த மூலப் பொருள்.

§ போகம் என்பது உலகியல் இன்பம். மோட்சம் என்பது பேரின்பம்.

செய்து, அனன்னியமான சிந்தனையோடு தன் கடமைகளைச் செய்து வருவானாயின், அவன் மிகவும் சீக்கிரமாகவே சித்தியை அடைகிறான்.

“ஏ அகஸ்தியரே! இந்த விஷயம் மிகவும் இரகசியமானது. உலகத்தில் எல்லோரும் க்ஷேமம் அடைய வேண்டும் என்பதற்காகவே, இதை நான் உம்மிடம் வெளியிட்டேன். தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், மனிதர்கள் முதலிய எல்லோருமே, இதை உம்மிடமிருந்து தெரிந்து கொண்டு, சித்தி பெறுவார்களாக!”

ஹயக்ரீவர் இவ்வாறு சொன்னவுடன், அந்தப் பரதேவதையைப் பற்றி மேலும் விரிவாக விளக்கிக் கூறுமாறு, அகஸ்தியர் அவரை வேண்டிக் கொண்டார். ஹயக்ரீவரும் அவ்வாறே விளக்கிக் கூறினார். அதை நாம் அடுத்த இதழில் கவனிப்போம்.

காஞ்சீபுரத்தில் அகஸ்தியர் இருந்து தவம் செய்த ஆசிரமம் தான், இப்போது அங்குள்ள சர்வதீர்த்தத்திற்குத் தெற்கே உபநிஷத்ப்ரம்மேந்திர மடம் என்ற பெயரோடு விளங்கிக் கொண்டு இருக்கிறது. ○

நமது கலாச்சாரம்

கலைச்செல்வி இராம. மணிமேகலை

மனிதன் உயர்வு அடைவதற்கான ஒரே வழி

கடவுளை ஏதேனும் ஒரு வடிவத்தில் வழிபடுவதே இந்த நாட்டின் அடிப்படையான கலாச்சாரம் என்பதை, நாம் சென்ற இதழிலே கண்டோம்.

அந்த வடிவம் கல்லாக இருக்கலாம், செம்பாக இருக்கலாம், காணப்படுகிற பொருள்கள் அனைத்துமாகவும் இருக்கலாம். அல்லது, அன்னையாக இருக்கலாம், தந்தையாக இருக்கலாம், ஆச்சாரியன் எனப்படுகிற குருவாகவும் இருக்கலாம்.

காணப்படுகிற பொருள்கள் அனைத்தையும் கடவுளாகக் கருதுபவர்கள் ஞானிகள். அவர்கள் இந்த உலகியலுக்கு அப்பாற்பட்டவர்கள். இறைவனுக்கு வேருக உலகம் என ஒன்று இருப்பதாகவே அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். கடலிலே போய் வீழ்கின்ற ஒரு நதி எப்படித் தன்னுடைய தனித்தன்மையை (individuality) இழந்து, கடலோடு கடலாய்க் கலந்துவிடுகிறதோ; அப்படியே அவர்களும் தம் ஆன்மாவை இறைவனுக்கே அர்ப்பணம் செய்து, அதன்மூலம் தம்முடைய தனித்தன்மையை இழந்து, இறைவனோடு இறைவனாய்க் கலந்து விட்டவர்கள்.

கங்கை, காவிரி, கோதாவரி, இவையெல்லாம் வெவ்வேறு மாநிலங்களிலே ஓடுகிற வெவ்வேறு நதிகள்தாம். ஆனால், கடலிலே போய்க் கலந்த பிறகு, அந்தக் கடலில் உள்ள நீரை ''இது கங்கையாற்றுத் தண்ணீர், இது காவிரியாற்றுத் தண்ணீர்'' என்று யாராவது வேறு பிரித்துக் கூற முடியுமா? அதேபோல் இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்ட ஞானிகளை, அந்த இறைவன் வேறு — ஞானிகள் வேறு என்று யாராலும் வேறு பிரித்துக் கூற முடியாது. அதாவது, ஞானிகள் தாமே இறைவன் என்ற நிலையை அடைந்து விடுகின்றனர். மனிதர்களாய்ப் பிறந்தோர் அடையக்கூடிய உயரிய நிலைகளில், இதைக் காட்டிலும் சிறப்பானது அல்லது மேலானது இன்னொன்று இருக்க முடியுமா?

இந்த மகத்தான நிலையை எப்படி அடைவது என்பதற்கு வழி காட்டும் வகையிலேதான், நம் பாரத நாட்டின் அடிப்படைக் கலாச்சாரமேஅமைந்திருக்கிறது. நமது வேதங்களும்அறநூல்களும்

அந்தக் கலாச்சாரத்தைத்தான் பிரதிபலிக்கின்றன. அதாவது, நம் பாரத நாட்டில் பிறந்த ஒவ்வொருவருமே, மனிதன் என்ற தன்மையைக் கடந்து மேலேறிச் சென்று; கடவுள் என்ற தன்மையை அடையவேண்டும் என்பதுதான் நமது கலாச்சாரத்தின் முடிவான குறிக்கோள்.

இந்தக் குறிக்கோளை அடைவதற்கு இடைஞ்சலாய் இருப்பது ஒன்றே ஒன்றுதான். அதுதான் **நான்** என்னும் அகந்தை. அந்த அகந்தை இருக்கும்வரையில், மனிதன் கடவுள் நிலையை அடையவே முடியாது.

கங்கையாறு தன் தனித்தன்மையை இழந்தால் ஒழிய, அது கடலாக மாற முடியாது. அதே போல, ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தனித்தன்மையை இழந்தால் ஒழிய, அவன் கடவுளாக மாற முடியாது.

நான் என்னும் தன்முனைப்பை விட்டொழிக்கும்வரையில், அந்தத் தனித்தன்மை அவனை விட்டு நீங்கவே நீங்காது.

தன்முனைப்பை எப்படி விட்டொழிப்பது? தன்னடக்கத்தின் மூலம்தான், மனிதன் தன் முனைப்பை விட்டொழிக்க முடியும். அதனாலேயே ''அடக்கம் அமரருள் உய்க்கும், அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்'' (அதாவது, அடக்கம் ஒருவனைத் தெய்வமாகவே உயர்த்திவிடும். அதற்கு எதிரிடையாகிய அகம்பாவம் அவனை இருள்போன்ற துன்பக் கடலில் வீழ்த்திவிடும்) என்கிறார் திருவள்ளுவர்.

திருக்குறளில் **அடக்கமுடைமை** என்று ஒரு தனி அதிகாரமே இருக்கிறது. அதில், அடக்கமுடையவன் மலையைக் காட்டிலும் உயர்வுடையவன் ஆகிறான் (''...அடங்கியான்தோற்றம் மலையினும் மாணப் பெரிது'') என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது, வாழ்க்கையில் ஒருவன் எவ்வளவுக்கு எவ்வளவு உயர்ந்த நிலைகளை அடைய ஆசைப்படுகிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவன் அடக்கமுடையவனாய் இருக்கவேண்டுமாம். ஏனென்றால். உயிருக்கு ஆக்கத்தைத்தரக்கூடிய உறுதிப்பொருள்களில், அடக்கத்தைக் காட்டிலும் மேலானது வேறுஎதுவுமே கிடையாதாம். ஆகையால், அடக்க குணத்தை ஓர் அருஞ்செல்வம் போல் கருதிப் பேணிக்காக்க வேண்டும் (''காக்க பொருளா அடக்கத்தை'') என்கிறார் வள்ளுவச் செம்மல்.

இந்த அடக்க குணம்தான் நம் பாரத நாட்டுப் பண்டையக் கலாச்சாரத்தின் முதுகெலும்பாக விளங்கி வந்திருக்கிறது.

இராமன் திருமாலின் அவதாரமாகவே இருந்தபோதிலும்கூட, அவன் தன் தந்தையின் சொல்லுக்கு **அடங்கி** வனவாசம் சென்றான்.

தசரதன் ஒரு மாபெரும் சக்கரவர்த்தியாய் விளங்கிய போதிலும், தன் குலகுருவின் சொல்லுக்கு **அடங்கி** இராமனை விசுவாமித்திரரோடுஅனுப்பிவைத்தார்.

விசுவாமித்திரர் தம்முடைய தவத்தின் மகிமையால் தாடகையைச் சபித்து எரித்துவிட முடியும் என்றாலும், சாஸ்திர விதிகளுக்கு

அடங்கி அவளைத் தாமே கொல்லாது விடுத்தார்.

பிரகலாதன்மீது எல்லையற்ற வாஞ்சையுடையவளாயிருந்தாலும், அவனுடைய தாயானவள் தன் கணவன் கட்டளைக்கு அடங்கி, மகனுக்குத் தன் கையாலேயே நஞ்சை ஊட்டினுள்.

இப்படியே எந்தப் புராண இதிகாசங்களைப் பார்த்தாலும், உத்தமமான மனைவியர் தம் கணவனுக்கு அடங்கி நடந்தார்கள், உத்தமமான சீடர்கள் தம் குருவுக்கு அடங்கி நடந்தார்கள், உத்தமர்கள் என்று கருதப்பட்டவர்கள் அத்தனை பேருமே, தரும சாஸ்திரங்கள் எனப்படும் அறநூல்களின் விதிகளுக்கு அடங்கி நடந்தார்கள் என்னும் செய்திகள்தாம் அவற்றில் காணப்படுகின்றன.

இந்த அடக்க குணம் எப்போது ஏற்படுகிறது?

தம்பி தன் அண்ணனைப்பார்த்து "நீரும் மனிதன், நானும் மனிதன். வயது ஒன்றைத் தவிர, வேறு எந்தவகையில் நீர் என்னைவிடப் பெரியவர்?" என்று கேட்பவனாய் இருந்தால், அவனால் தன் அண்ணனுக்கு அடங்கி நடக்க முடியாது.

மனைவி தன்கணவனைப்பார்த்து "ஆணுக்குப் பெண் அடிமையாயிருந்தது அந்தக்காலம். ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்பது இந்தக்காலம்" என்று பேசுபவளாய் இருந்தால், அவளால் தன் கணவனுக்கு அடங்கி நடக்க முடியாது.

மனைவி அடங்கி நடக்காவிட்டால், அதனுல் கணவனுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. அவளுக்குத்தான் நஷ்டம். ஏனென்ருல், அவளுடைய அகம்பாவமே இருள் போன்ற துன்பக்கடலை நோக்கி அவளை இழுத்துச்சென்றுவிடும்.

அதேபோல், தம்பி அடங்கி நடக்காவிட்டால், அதனுல் அண்ணனுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. தம்பிக்குத்தான் நஷ்டம். ஏனென்ருல், அவனுடைய அடங்காமையே அவனை ஆரிருள் உய்த்து விடும்.

இம்மாதிரியெல்லாம் ஏற்படாமல் இருப்பதற்காக, நமது அறநூல்களில் ஓர் அருமையான உபாயம் கூறப்பட்டுள்ளது. அந்த உபாயத்தை மட்டும் ஒழுங்காகக் கடைப் பிடித்துவந்தால், தம்பிக்கு அண்ணனிடத்திலும், மனைவிக்குக் கணவனித்திடத்திலும், சீடனுக்குக் குருவிடத்திலும், பிள்ளைகளுக்குப் பெற்ருேரிடத்திலும், உள்ளத்தில் தானுகவே மரியாதை சுரக்கும்.

அந்த உபாயம் வேறொன்றும் இல்லை. தன் அண்ணனும் தன்னைப்போல் ஒரு மனிதன்தானே யென்று எண்ணுமல், தம்பி அவனைத் தெய்வமாகப் பாவிக்கவேண்டும்.

அதேபோல், மனைவி தன் கணவனைத் தெய்வமாகப் பாவிக்க வேண்டும்.

சீடன் தன் குருவைத் தெய்வமாகப் பாவிக்கவேண்டும்.


பிள்ளைகள் தம் பெற்ருேரைத் தெய்வமாகப் பாவிக்கவேண்டும்.

மறைகளையும் அறநூல்களையும் ஏதோ காலங்கடந்த சட்டப்புத்தகங்களாகக் கருதாமல், அவற்றை எக்காலத்துக்கும் பொருத்தமான இறைவனது திருவாக்குகளாகப் பாவிக்கவேண்டும்.

இத்தகைய உத்தமமான பாவனைகள்தாம், மனிதனை உலகியல் நிலையிலிருந்து தெய்விக நிலைக்கு உயர்த்தக்கூடியவையாகும்.

ஆனால், பாவனாசக்தியென்பது திடீரென்று ஒரே நாளிலோ அல்லது ஒரே மாதத்திலோ அடையக் கூடிய ஒரு சித்தி அல்ல. நெடுங்கால மனப்பயிற்சிக்குப் பின்னரே ஒருவர் அதை அடைவதற்கு இயலும். அந்தப் பயிற்சியும் இளமைக் காலத்திலேயே தொடங்கப்படவேண்டும். அதாவது, பிள்ளைப் பருவத்திலேயே நம் தாயையும் தந்தையையும் கடவுளாகப் பாவிப்பதற்கு நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

கடவுள்தாம் உலகத்தைப் படைக்கிறார், காப்பாற்றுகிறார் என்றெல்லாம் மறைகள் பறையறைகின்றன. ஆனால், பிள்ளைகளைப் படைப்பதும் காப்பாற்றுவதும் பெற்றோர்களே அல்லவா? எனவே, அந்தப் பெற்றோர்களைக் காட்டிலும் கண்கண்ட தெய்வங்கள் வேறு ஏதேனும் இருக்க முடியுமா? ○



நச்சுப் பொய்கை

ஸ்ரீ ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்

கேள்வி: சமம் என்றால் என்ன?

பதில்: மனம் அடங்கியிருத்தலே சமமாம்.

(கெட்ட விஷயங்களில் செல்லுங்காலத்தில் மனத்தை அடக்குதல் தமம். அவற்றில் செல்லாமலே அடங்கியிருத்தல் சமம் என்று இரண்டிற்கும் வித்தியாசத்தை அறியவும்.)

கேள்வி: தயைஎன்றால் என்ன

பதில்: அனைவரும் சுகமாக வாழ வேண்டும் என விரும்புதல்.

கேள்வி: ஆர்ஜவம் என்றால் என்ன?

பதில்: அனைவரிடமும் சமமான எண்ணத்துடன் கூடியிருத்தல்.

கேள்வி: ஜயிக்க முடியாத விரோதி யார்?

பதில்: கோபம்.

கேள்வி: தீராத வியாதி எது?

பதில்: பேராசை.

கேள்வி: ஸாது என்று குறிப்பிடக் கூடியவன் யார்?

பதில்; எல்லாப் பிராணிகளுக்கும்நன்மைகளைச்செய்கின்றவன்.

கேள்வி: அஸாது என்று குறிப்பிடக்கூடியவன் யார்?

பதில்: தயை என்ற குணமற்றவன்.

கேள்வி: மோஹம் என்றால் என்ன?

பதில்: தர்மத்தில் அறிவில்லாமை.

கேள்வி: மானம் என்றால் எது?

பதில்: தானே பெரியவன் என்ற அஹங்காரத்துடன் இருத்தல்.

கேள்வி: ஆலஸ்யம்(சோம்பல்) என எதைக் கருத வேண்டும்?

பதில்: தர்மத்தை அனுஷ்டிக்டிக்காமல் இருத்தலே சோம்பலாம்.

கேள்வி: சோகம் என்றால் எது?

பதில்: அறியாமையே சோகம் எனப்படும்.

கேள்வி: ஸ்தைர்யம் (உறுதி) என்றால் என்ன?

பதில்: சொந்த தர்மானுஷ்டானத்தில் உறுதியுடனிருத்தலே ஸ்தைர்யம்.

கேள்வி: தைர்யம் என்றால் என்ன?

பதில்: இந்திரியங்களை அதன தன் விஷயங்களிலிருந்து திருப்புதலே தைரியம்.

கேள்வி: ஸ்நானம் என்றால் என்ன?

பதில்: மனத்தில் உள்ள அழுக்குகளை (காமம், குரோதம் முதலியவற்றை) தியாகம் செய்தலே ஸ்நானம் எனப்படும்.

கேள்வி: தானம் என்றால் என்ன?

பதில்: பூதங்களை இரக்ஷித்தலே தானம்.

கேள்வி: பண்டிதன் என்பவன் யார்?

பதில்: தர்மத்தை அறிந்தவனே பண்டிதன்.

கேள்வி: நாஸ்திகன் என்பவன் யார்?

பதில்: பரலோகம் இல்லையெனக் கூறும் மூடனே நாஸ்திகன்.

கேள்வி: மூர்க்கன் என்பவன் யார்?

பதில்: நாஸ்திகனே மூர்க்கன் எனப்படுவான்.

கேள்வி: காமம் என்றால் என்ன?

பதில்; ஸம்ஸாரத்திற்குக் காரணமான வாசனைகளே காமம் எனப்படும்.

கேள்வி: மத்ஸரம் என்றால் எது?

பதில்: மனத்தில் ஏற்படும் தாபங்களே மத்ஸரம்எனப்படும்.

கேள்வி: அஹங்காரம் என்றால் என்ன?

கேள்வி: கொடிய அஞ்ஞானமே அஹங்காரம் எனப்படும்.

கேள்வி: தம்பம் என்பதுயாது?

பதில்: தர்மத்தை அனுஷ்டிப்பதாக உலகத்தாரிடம் விளம்பரம் செய்தல்.

கேள்வி: தெய்வம் என்பது யாது?

பதில்: ஒருவன் செய்த தானத்தின் பயனே தெய்வம் என வழங்கப்படுகிறது.

கேள்வி: பைசூன்யம் என்றால் என்ன?

பதில்: பிறரை தூஷித்தல்.

கேள்வி: தர்மம், அர்த்தம், காமம் இம்மூன்றும் பரஸ்பரம் முரண்பட்டவைகளே; இம்மூன்றும் எவ்வாறு ஓரிடத்தில் சேர்ந்திருக்கக்கூடும்?

பதில்: தர்மமும் பார்யையும் பரஸ்பரம் விரோதமில்லாமல் (அதாவது, பார்யை தர்மாவஷ்

டானத்திற்கு அனுகூலமாக) இருந்தால், தர்மத்திலிருந்து அர்த்தமும், பார்யையிடமிருந்து காமமுமுண்டாகும். ஆக, அனுகூலமான பார்யையை அடைந்து தர்மங்களையும் அனுஷ்டித்து வந்தால், திரிவர்க்கம் எனப்படும் தர்மம், அர்த்தம், காமம் இம் மூன்றும் சித்திக்கும். அதன் மூலம் கிருஹஸ்தனுக்கும் மோக்ஷத்தில் அதிகாரம் ஏற்படுகின்றது.

கேள்வி: எப்பொழுதும் ஒருவன் நரகத்திலேயே வசிக்கும்படி நேருவதற்குக் காரணம் யாது?

பதில்: (1) யாசிக்கும் ஓர் ஏழைப் பிராமணனை, ஏதோ தருவதாகத் தானாகவே முதலில் அழைத்து, பிறகு இல்லை என்று எவன் கூறுகின்றானோ, அவன் எப்பொழுதும் நரகத்திலேயே வசிப்பான்.

(2) வேதங்கள் தர்ம சாஸ்திரங்கள் இவற்றை அறிந்த அந்தணர்கள், தேவதைகள், பித்ருக்களைக் குறித்துச் செய்ய வேண்டிய சிராத்தம் முதலியவற்றை, ''எல்லாம் பொய், ஒன்றுமே உண்மையல்ல'' என்று எவன் கூறுகின்றானோ, அவன் எப்பொழுதும் நரகத்திலேயே வசிப்பான்.

(3) ஏராளப் பொருள் இருக்கையிலே, தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் எவன் எப்பொழுதும் இல்லையென்றே கூறிக்கொண்டிருக்கின்றானோ, அவன் எப்பொழுதும் நரகத்திலேயே வசிப்பான்.

கேள்வி: பிராம்மண்யம் எதனால் சித்திக்கின்றது? உயர்ந்த குலத்தில் பிறந்ததாலா? ஒழுக்கத்தாலா? வேதாத்யயனத்தாலா? வேதார்த்தத்தை உணர்ந்ததாலா? பல அறிஞர்களால் தீர்மானம் செய்யப்பட்ட பதிலை கூறுங்கள் பார்க்கலாம்.

பதில்: குலத்தாலோ, அத்யயனத்தாலோ, அல்லது அதன் அர்த்தத்தை உணர்ந்ததாலோ பிராம்மண்யம் சித்திப்பதில்லை. நல்லொழுக்கத்தால் தான் பிராம்மண்யம் சித்திக்கின்றது. இதில் ஐயமில்லை. ஆதலால் பிராம்மணனாகப் பிறந்தவன் நல்லொழுக்கத்துடன் வாழ பூர்ண முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். பிராம்மணனாகப் பிறந்து ஒழுக்கமற்றவனாக இருந்தால், அவன் அழிந்தவன் என்றே கருதப்பட வேண்டும். வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் கூறப்பட்டதை அனுஷ்டிப்பவனே பண்டிதன். அனுஷ்டானமில்லாமல் ஏராளமாகப் படிப்பவர்களும், பிறருக்குக் கற்பிப்பவர்களும், சாஸ்திர விமரிசனம் செய்கின்றவர்களும் மூடர்கள், வீணாகக் கஷ்டப்படுகின்றவர்கள் என்றே கருதப்பட வேண்டும். நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்தவனாகிலும், கெட்ட ஒழுக்கமுள்ளவனாகில் அவன் மிகவும் நீசன் என்றும், அடக்க ஒடுக்கத்துடன் அனுஷ்டான சீலனாக இருப்பவனே சிறந்த பிராம்மணன் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

கேள்வி: பிரியமான வார்த்தைகளையே பேசுகின்றவன் எதை அடைகிறான்?

பதில்: அனைவருடைய அன்பையும் பெறுகின்றான்.

கேள்வி: ஆலோசித்துக் காரியங்களைச் செய்கின்றவன் எதை அடைகிறான்?

பதில்: எடுத்த காரியங்களில் அதிகமாக வெற்றியைப் பெறுகின்றான்.

கேள்வி: பல நண்பர்களுடைய வன் எதைப் பெறுகின்ருன்?

பதில்: சுகமாக வாழ்க்கையை நடத்துகின்ருன்.

கேள்வி: தர்மத்தில் ஈடுபட்ட வன் எதை அடைகின்ருன்?

பதில்: தர்மத்தில் ஈடுபட்ட வன் நற்கதியை அடைகின்ருன்.

கேள்வி: எவன் சந்தோஷத் துடன் வாழ்கின்ருன்?

பதில்: ஐந்து நாளைக்கு ஒரு தடவையோ, அல்லது ஆறு நாளைக்கு ஒரு தடவையோ, அல்லது பகலை ஆறு பாகங்களாகப் பிரித்து ஐந்தாவது பாகத்திலோ அல்லது ஆருவது பாகத்திலோ, தனது சொந்த கிருஹத்தில், சாதாரணக் காய்கறிகளை சமைத்து புசிப்பவனும், கடனில்லாதவனும், தன் வீடுவாசல், பிள்ளை குட்டி அனைவரையும் விட்டு விட்டு வேறு தேசத்திற் குச் சென்று வசிக்காமல் இருப்பவனுமே சுகமாக வாழ்பவனுகக் கருதப்பட வேண்டும்.

கேள்வி: உலகில் எது ஆச்சரியம்?

பதில்: பிரதிதினம் பல பிராணிகள் யமலோகத்துக்குச் சென்று கொண்டே இருக்கின்றனர். ஆனுல் அதைப் பார்த்துக் கொண்டே இருக்கும் மற்றவர்கள், தாம் மட்டும் அழிவற்றவர்களாகவே இருக்க விரும்புகின்றனர். இதைவிட வேறு என்ன ஆச்சரியமிருக்கிறது?

அகிம்சையின் இலக்கணம்



மகாத்மா காந்தியடிகள்

அகிம்சை என்பது வெறும் சாப்பாட்டு விஷயத்தை மட்டும் பொறுத்ததன்று!

அகிம்சை என்பது விரிவான பொருள் பொதிந்துள்ள ஒரு கொள்கையே ஆகும்!

எவ்வளவு பயங்கரமான இம்சையையும் எதிர்த்து நிற்பதற்கேற்ற சக்தி வாய்ந்த ஆயுதம் அகிம்சையைத் தவிர வேறு எதுவும் இல்லை!

பலவானின் அகிம்சைதான் பாருலகில் சர்வ சக்தி வாய்ந்தது.

விரோதம், கோபம், குரோதம் முதலான இருட்டையெல்லாம் அகிம்சை என்னும் சூரியன் ஒழித்து விடுகிறான்!

அகிம்சை என்ற ஒடுக்கமான, ஆனால் நேரான வழியால்தான் துன்புற்ற உலகம் கடைத்தேற முடியும்!

அகிம்சையே நமது மதத்தின் அடிப்படை. அகிம்சையைச் செயலில் காட்டும்போது அது அன்பாக மாறுகிறது. அன்பே அகிம்சையின் உருவம்!

அகிம்சா தத்துவத்தைச் சரிவர உணர்ந்து கடைப் பிடிப்பவன் ஒரு காலத்தில் உலகமே தன் வசம் இருப்பதைக் காண்பான்!

நம்முடைய இதயங்களை ஆராயும்படி செய்வதே அகிம்சையின் ஆரம்பமும் முடிவும் ஆகும்!

அகிம்சை பலன் தர வேண்டுமானால், அது உங்கள் பேச்சு, செயல், நடத்தை அனைத்திலுமே பிரகாசிக்க வேண்டும்!

அகிம்சையானது இருதயத்தில் இல்லாமல் செயலில் மட்டும் இருந்தால், நாம் விரும்பும் பயனை அனுபவிக்க முடியாது!

அகிம்சை என்பது மனோதிடமுள்ளவர்களுக்கே உரியது!

ஆண்மைக்கு அழகு அகிம்சை; அதைப்பற்றி அறியமாட்டான் கோழை!

இம்சையின் வாய்க்குள் நுழைவதே உண்மையான அகிம்சையின் இலட்சணமாகும். பசுக்களுக்கு அறிவு இருந்து பல பசுக்கள் புலியின் வாய்க்குள் நுழையத் துணியுமானால், புலிக்கு இறைச்சியிலுள்ள சுவை போய் விடும்; புலியின் குணமும் மாறி விடும்!

அகிம்சை தன்னுடைய குறைகளைப் பெரிதுபடுத்தியும், எதிரியின் குறைகளைக் குறைவு படுத்தியும் கூறும்.

நம்மிடமுள்ள அகிம்சை எதிரியின் இதயத்தை இளகச் செய்ய வேண்டுமே தவிர, இறுகச் செய்யக் கூடாது.

உண்மையான அகிம்சையானது ஒரு நாளும் எதிரியின் இதயத்தை மாற்ருமல் வீண் போவதில்லை என்றே நான் கருதுகிறேன். அது எதிரியின் இதயத்தை • மாற்ருமல் போகுமாஞல், அந்த அளவிற்கு அது குறைபாடு உள்ளதேயாகும்!

நம்பத்தகாதவர் என்று யாரைக் கருதுகிருேமோ, அவர்களை நம்புவதே அகிம்சையின் பொருள். அவ்விதமாகச் செய்யாவிட்டால், அவர்களுடைய மனத்தை ஒருபோதும் மாற்றவே முடியாது.

நாம் அகிம்சையைக் கடைப்பிடிப்பதன் மூலமாகக் கடைசியில் நமது எதிரியும் அகிம்சையைக் கடைப்பிடித்துத் தீர வேண்டிய நிலைவரும்.

கடவுளை நம்பி அச்சத்தை ஒழிப்பதே அகிம்சை வழி! அது தான் உன்னதமானது. தன் உடல் வலியை நம்புவது இம்சை வழி. இரண்டிற்கும் இவ்வையகத்தில் இடம் உண்டு.

இந்தியாவில் எங்கு நோக்கிஞலும் இம்சை முறைக்கும் அகிம்சை முறைக்கும் துவந்த யுத்தம் நடந்து கொண்டேயிருக்கிறது.

அகிம்சையை இந்தியாவின் ஆயுதமாக உபயோகிக்க எண்ணுகிறேன். ஆஞல் இந்த அகிம்சையானது பலவீனர்களின் ஆயுதமன்று; பலவான்களின் ஆயுதமே ஆகும்!

அகிம்சையையும் சத்தியத்தையும் பின்பற்றுகிற பாதை மிக நெடிதாய்த் தோன்றிஞலும், அதுவே குறுக்குப் பாதை என்பதுதான் என் எண்ணம்!

அகிம்சை என்பது ஒரு விஞ்ஞானம்! விஞ்ஞானத்தின் பாஷையில் தோல்வி என்ற சொல் காணப்படாது! எதிர்பார்த்த பலன் உடனடியாகக் கிடைக்காமல் போவதே அநேக சமயங்களில் எதிர் காலத்தில் பல விஷயங்களைக் கண்டு கொள்ளுவதற்கு அஸ்திவாரமாகும்.

அகிம்சை, ஒத்துழையாமை — இவைகளின் இரகசியம் என்னவென்ருல், நாம் படும் துயரங்களிஞல் நமது குறிக்கோளை அடைந்து விடுகிருேமென்பது தான்!

அகிம்சை என்பது ஒரு ஆக்க சக்தியேயாகும். அழித்தல் சக்தியன்று. அது ஜனநாயகத்தை ஸ்தாபிக்கும் மன்னரையோ குடி மக்களையோ அழிக்காது. ஆள்வோர் ஆளப்படுவோர் இருசாராரின் நல்ல அம்சங்களையெல்லாம் உபயோகப்படுத்திக் கொள்ளும். சுருக்கமாகச் சொன்ஞல், ஆயுதத்தாலன்றி அன்பிஞலேயே இருசாராரையும் ஒன்று சேர்க்க முயலும்!

ஆயுதப் போரிலும் அகிம்சைப் போரிலும் போர் வீரனுடைய நிலைமை ஒரே மாதிரியானதுதான். அவனுக்கு ஓய்வும் கிடையாது, நிச்சயமும் கிடையாது. எந்தக் கணமும் உயிர்விட நேரலாம் என்ற நிச்சயம் ஒன்று மட்டுமே உண்டு!

உண்மையான வீரர் என்பவரிடம் பொருமை, ஆத்திரம், அவநம்பிக்கை, சாவையோ உடல் காயத்தையோ பற்றிய அச்சம் முதலானவைகள் இருக்கலாகாது. இம்முக்கிய பண்புகள் இல்லாதவர்களுக்கு அகிம்சை நிச்சயமாக ஏற்றதல்ல.

கோழைகளின் அகிம்சையைவிட, வீரர்களின் அகிம்சையே நமக்குத் தேவை! சத்தியத்திற்காக உயிரைக் கவராது தம்

உயிரையே கொடுப்பவர்கள் தான் வேண்டும்!

இம்சிக்கப் படுகிறவர்களுக்கு அகிம்சா முறை தெரியாவிட்டால், அவர்கள் தங்களால் முடிந்த அளவு பலாத்காரத்தை உபயோகித்து எதிர்க்கவும், அதில் வெற்றி பெறாவிடில் மரித்து விடவும் தயாராயிருக்க வேண்டும். அந்த பலாத்கார எதிர்ப்பும் ஓர் எலியானது மூர்க்காவேசமுள்ள பூனையிடம் காட்டும் எதிர்ப்பைப் போலவே அகிம்சையின் வழிப்படும்.

அகிம்சைதான் நமது வாழ்விற்கு ஆதாரமான விதிமுறை என்றால், நமது எதிர்காலம் பெண்களின் கையில்தான் இருக்கிறது!

அகிம்சையை அதிகத் துணிவுடன் செயலில் காட்டவும், அதுபற்றி ஆராய்ச்சிகள் செய்யவும், ஆண்களைவிடப் பெண்களே மிகவும் தகுதி உள்ளவர்கள்!

கலப்பற்ற அஞ்சாமை இல்லாத இடத்தில், உண்மையான அகிமசா தர்மம் நடைபெறுவது சாத்தியமில்லை!

உண்மையையும் அகிம்சையையும் நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்றால், அச்சத்தை அறவே விட்டுவிட வேண்டும். ○

இன்ப வாழ்வுக்கு இதுவே வழி



புத்தர் பெருமான்

அந்தரங்கத்திலும் வெளிப்படையிலும், அன்பான செயல்கள், அன்பான வார்த்தைகள், அன்பான எண்ணங்களைப் பழக்கத்திற்குக் கொண்டு வாருங்கள்.

ஆசைகளுக்குச் சமமான நெருப்பு வேறெதுவுமில்லை.

வயல்களுக்குக் கேடு, களைகள்! மனித ஜாதிக்குக் கேடு, ஆசைகள்!

ஆசையினால் தூண்டித் தள்ளப்பட்ட மனிதர்கள், வேட்டையில் விரட்டப்பட்ட முயல்களைப் போல் அங்குமிங்கும் ஓடித்திரிகிறார்கள்.

எவனைக்கொடிய நஞ்சுபோன்ற ஆசை பிடித்துக் கொள்கிறதோ, அவனுக்குத் துக்கம் காட்டுப் புல்லைப்போல மேலும் மேலும் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

நன்கு வேயப்பட்ட கூரை வழியாக மழைநீர் உடைத்துக் கொண்டு வீட்டினுள்ளே புக முடிவதில்லை. அதுபோல, நன்கு சிந்தனைப் பிரதிபலிப்பு வாய்க்கப்பெற்ற மனத்தின் வழியாக எந்தவித ஆசை வெறியும் உடைத்துக்கொண்டு உள்ளே நுழைய முடிவதில்லை.

ஒரு மரத்தை மட்டும் வெட்டினால் போதாது! ஆசைக்காடு முழுவதையுமே வெட்டி எறியுங்கள்! ஆசைக் காட்டிலிருந்தே அபாயம் வருகின்றது. காட்டையும் அதனடியில் வளர்ந்திருக்கும் புதர்களையும் வெட்டியெறிந்து விட்டால், அதன் பிறகு, ஓ பிக்ஷுக்களே, நீங்கள் கட்டிலிருந்து விலகி விடுதலை பெறுவீர்கள்!

சிலந்தி, தான் பின்னிய வலைக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அதுபோல, ஆசைகளுக்கு இணங்கியவர்கள் ஆசைகளின் வெள்ளப் போக்கிலே நீந்திக் கொண்டிருக்கிறார்கள். அறிவாளிகளோ இந்த ஆசை வலையை அறுத்துக் கொண்டு கவலைகளிலிருந்தும், துக்கங்களிலிருந்தும் விடுபட்டுச் செல்கிறார்கள்.

தூய்மையான எண்ணத்துடன் ஒருவன் பேசினாலும் செயல் புரிந்தாலும், அவனை விட்டு விலகாத நிழல்போல், ஆனந்தம் அவனைப் பின்பற்றிச் செல்கிறது.

மோக சுகங்களைக் கைவிட்டு, எதையும் தனக்குச் சொந்தமான தென்று கருதாமல், அறிவாளி யானவன் தன் மன மாசுகளை அகற்றிவிட வேண்டும். அப்போது அவன் ஆனந்தத்தைக் காண்பான்.

சோம்பேறித்தனத்தின்வெறும் மனப் பிரமைகளையோ, புலன் இச்சைகளின் இன்பத்தையோ, ஆசையாகிய காம அனுபவங் களையோ பின்பற்ற வேண்டாம். கருத்து முயற்சியும், சிந்தனை, ஒருமிப்பான தியானமும் உள்ள வனே எல்லையற்ற ஆனந்தத்தை அடைகிறான்.

உலக விஷயங்களில் தீண்டப் படாத இருதயம்; துக்கத்தினால் சுழற்றப்படாத இருதயம்; ஆசை களற்றுப் பத்திரமாக இருக்கும் இருதயம் - இதுதான் மாபெரும் நற்பாக்கியம்!

இளமையிலே பிரும்மச்சரியத் தைக் கைக் கொள்ளாதவரும், பொருள் தேடிக் கொள்ளாத வரும், உளுத்துப்போன விற் களைப் போலப் பழமையை நினைத்து நினைத்து ஏங்கித் தவிப் பார்கள்.

தேவையேற்படும்போது நண் பர்கள் கிடைப்பது இனிது; ஒரு பக்ஷமாயிராத திருப்தி இனிது; சாவு நேரத்தில் (முன் செய்த) நற்செயல்கள் இனிது; துக்க மனைத்தையும் நீத்து விடுவது இனிது.

வயோதிக வயதுவரை ஒழுக் கம் நிலைத்திருப்பது இனிமை யானது; (அறவழியில்) உறுதி நம்பிக்கை கொள்வது இனிமை யானது; அறிவை அடைவது இனிமையானது; தீச் செயல்களை விலக்குவது இனிமையானது.

இன்பக் கேளிக்கை ஒன்றிற் காகவே வாழ்ந்து திரிபவனை, தன் மோக உணர்ச்சியைக் கட் டுப்படுத்தாமலும் உணவு விஷ யத்தில் மிதமாயிராமலும், சோம்பிப் பலஹீனமாய்த் திரியும் ஒருவனை, பலஹீனமான மரத் தைச் சூறைக்காற்றானது அடி யோடு பிய்த்துக் கீழே விட்டெ றிந்து விடுவதைப்போல, மாரன் தூக்கியெறிந்து விடுவது சர்வ நிச்சயம்.

இன்பத்தையோ துன்பத் தையோ எவனும் கைப்பற்றிக் கொண்டிருக்க வேண்டாம். இன் பத்தைக் காணவிட்டாலும் துக் கம்; துன்பத்தைக் கண்டாலும் துக்கம்!

அற்ப இன்பத்தைத் துறப்ப தால் பெரும் இன்பத்தைக் காண லாம்.

நல்ல பண்புள்ள மனிதன் இந்த உலகில் இன்பமாயிருக் கிறான்; மறுமையிலும் இன்ப மாய் இருக்கிறான்; இரண்டிலும் அவனுக்கு இன்பமேதான். செய்த நல்ல காரியத்தை நினைக் கும்போது இன்புறுகிறான்; நல்ல பாதையில் செல்லும்போது இன் னும் அதிகமாய் இன்புறுகிறான்!

O

குடும்பமும் கடமையும்

மகாகவி பாரதியார்

தர்மம் ஐரோப்பியருக்குத் தெரியாது. அதை நாம் ஐரோப்பியருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய முயற்சிகளை நாம் கற்றுக்கொண்டு, பிறகுதான் அவர்களுக்கு நாம் உபாத்தியாயராகலாம்.

ஆழ்ந்த உண்மைகளைக் கண்டு பிடிப்பதில் நாம் ஐரோப்பியரைக் காட்டிலும் மிக மிக உயர்ந்திருக்கிறோமெனினும், அவற்றை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதில் நம்மைக் காட்டிலும் அவர்கள் அதிக ஊக்கம் செலுத்துகிறார்கள். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகாது.

மற்றச் செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீண்டும் சமைத்துக் கொள்ள வல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒரு போதும் சம்மதப்பட மாட்டோம். அது மீண்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப்பெருஞ்செல்வம்.

தமிழ் ஜனங்களில் பெரும்பான்மையோருக்குச் சுமார் சென்ற இரண்டாயிரம் வருஷங்களாக ஔவையாரின் நீதியே ப்ரமாணமாக நடைபெற்று வருகின்றது.

ஔவையார் பிறந்த நாட்டு மாதரை, ஔவையார் இனத்து மாதரை, ஆண் மக்களைக் காட்டிலும் அறிவிலே குறைந்த கூட்டத்தாரென்று வாய் கூசாமல் எவனும் சொல்லத் துணிய மாட்டான்.

தெய்வத்துக்கே கடமையுண்டு. பகவான் கர்மயோகி.

நமக்குப் பொறுப்பில்லை, தொல்லையில்லை, செய்கையில்லை; கடமை மாத்திரம் உண்டு.

கடமையாவன - தன்னைக் கட்டுதல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல்......உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல் — இந்நான்கே இப்பூமியில் எவர்க்கும் கடமையெனப்படும். பயன் இதில் நான்காம் — அறம், பொருள், இன்பம், வீடு எனும் முறையே.

கடமையைத் தவிருவோன் விடுதலை பெற்றவன் அன்று. விடுதலையின் தலை மேலே ஒரு கடமை நிற்கிறது.

குடும்ப வாழ்க்கையே மற்றெல்லா வாழ்க்கைகளிலும் சிறந்தது.

குடும்பத்தை விடுவோன் கடவுளைத் துறக்க முயற்சி பண்ணுகிறான்.

குடும்பம் நாகரிக மடையாவிட்டால், தேசம் நாகரிகமடையாது. குடும்பத்தில் விடுதலை இராவிடில், தேசத்தில் விடுதலை இராது.

குடும்பத்திலிருந்து பொறுமை என்பதொரு தெய்விக குணத்தையும், அதனால் விளையும் எண்ணற்ற சக்திகளையும் எய்த விரும்புவோர், தாய் மனைவி முதலிய ஸ்திரீகள் தமக்கு வெறுப்புண்டாகத் தகுந்த வார்த்தை பேசும்போது, வாயை மூடிக்கொண்டு பொறுமையுடன் கேட்டுக் கேட்டுப் பழக வேண்டும். அங்ஙனமின்றி, ஒரு ஸ்திரீ வாயைத் திறந்த மாத்திரத்

திலேயே, அவள் தாயாயினும், உடம்பிலும் உயிரிலும் பாதியென்று அக்னியின் முன் ஆணையிட்டுக் கொடுத்த மனைவியாயினும் அவள்மீது புலிப்பாய்ச்சல் பாய்ந்து பெருஞ்சமர் தொடங்கும் ஆண்மக்கள், நாளுக்கு நாள் உலக விவகாரங்களில் தோல்வி எய்துவோராய்ப் பொங்கிப் பொங்கித் துயர்பட்டுத் துயர்பட்டு மடிவார்.

தான் ஒரு குற்றஞ் செய்தால் அதைச் சுண்டக்காய் போலவும், அதே குற்றத்தை மற்றவன் செய்தால் அதைப் பூசனிக்காய் போலவும் நினைக்கிறார்கள்.

மூடன் தான் செய்த குற்றத்தை மறந்து விடுகிறான்; அல்லது பிறருக்குத் தெரியாமல் மறைக்கிறான்; அல்லது பொய்க் காரணங்கள் சொல்லி, அது குற்றமில்லை என்று ருஜுப்படுத்த முயற்சி செய்கிறான்.

ஜனங்கள் குற்றஞ் செய்யாமல் நீதிக்காரர் பார்த்துக் கொள்ள வேண்டும். நீதிக்காரர் குற்றம் செய்யாமல் ஜனங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குற்றஞ் செய்த மனிதனைச் சீர்திருத்தி இனிமேல் அவன் குற்றஞ் செய்யாதபடி அறிவிலும் ஒழுக்கத்திலும் மேம்பட வழி செய்ய வேண்டும். இந்தக் கருத்துடன் தண்டனை செய்வோரையே தர்ம தேவதை க்ஷமிக்கலாம்.

குற்றத்திற்குக் காரணம் அறியாமை; அதை நீக்கும் வழி ஸத்ஸங்கமும் தைரியமும்.

பிறர் குற்றங்களை க்ஷமிக்கும் குணம், குற்றமில்லாதவர்களிடத்திலேதான் காணப்படும்.

எப்போதும் வானத்திலே சுற்றும் பருந்துபோல் போக விஷயங்களினால் கட்டுப்படாமல், பரமாத்மாவின் ஞானக் கதிரை விழித்து நோக்குதலே விடுதலை. அதுதான் சிதம்பரம்.

சித்தம் ஒரு கண்ணாடி. ஓயாமல் பராசக்தியை த்யானம் செய்யுமானால் அவளுடைய சாயை இதிலே படும். அதிலே சுகமுண்டு.

ஒருவன் எல்லா சித்திகளும் பெற்ற பிறகுகூட, மறுபடி நழுவி வீழ்ச்சி பெறக்கூடும்!

ஒரு தனியிடத்தே போயிருந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக் கூடிய சிந்தனைகள், பலம் தரக்கூடிய சிந்தனைகள், துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள், இவற்றால் அறிவை நிரப்பிக்கொண்டு தியானம் செய்வதை ஒரு நாளேனும் தவற விடாதே.

மனதில் சிரமந் தோன்றின பிறகுதான் உடம்பில் சிரமந் தோன்றுகிறது.

சித்தத்திலே சிவம் நாடுவார்—இங்கு சேர்ந்து களித்து உலகாளுவார்.

செய்வது துணிந்து செய்.

நமக்குச் செய்கை இயல்பாகுக. ரஸமுள்ள செய்கை இன்பமுடைய செய்கை, வலிய செய்கை, சலிப்பில்லாத செய்கை, விளையும் செய்கை, பரவும் செய்கை, கூடி வரும் செய்கை, இறுதியற்ற செய்கை.

ஒரு முறை ஒரு சித்தச் செய்கை நிகழ்ந்தால், அது மீள மீள நிகழும். ஒரு முறை செய்த தொழிலை மீட்டு மீட்டும் செய்தல் இன்றியமையாததாகும்.

ஒரு காரியம் தொடங்கும் போது, அதன் பயன் இன்னதென்று நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தப்

பயன் நமக்கு வேண்டியதுதானா என்பதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும். பயன்படாத காரியத்திலே உழைப்பவன், ஸங்கீதம் படிக்கப்போன கழுதை போல தொல்லைப்படுவான்.

ஒரு நல்ல காரியத்தைத் செய்யத் தொடங்குவோன், அதை ஒரே நீட்டாக வருஷக் கணக்கில் நீட்டி, மற்றவர்களுக்கு அதுவே ஒரு தீராத் தொல்லையாகும்படி செய்யலாகாது. ''சுபஞ்ச சீக்கிரம்'' நன்மையைத் துரிதப் படுத்த வேண்டும்.


இன்று செய்யக்கூடிய காரியத்தை நாளைக்குச் செய்யலாமென்று தாமதப்படுத்தி வைப்பதனால், அந்தக் கார்யம் பலமான சேதமடைந்து போகும். எதையும் தோன்றிய மாத்திரத்திலே சூட்டோடு செய்ய வேண்டும். ○

அமரர்

M. வாசுதேவன் செட்டியார் அவர்கள்

காரைக்குடி

தோற்றம்: *18-9-1919*; மறைவு: ***12-4-1969***



இரங்கற்பா

அன்பே உருவாய், அருங்குணமே பொற்கலனாய்,
இன்பமுற வாழ்ந்த எழில் வேந்தே!—உன்போல
மாசற்ற மாணிக்கம் மற்றொருவர் தாமுளரோ!
வாசுதே வாமேல வா!

அன்பர்கள்

15-5-69
சென்னை-4

நடராஜ்சகுந்தலா,
நடனகலா நிலையம்